2017 ஜுன் 15
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 20 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 091

NAVAMANI DAILY நவமணී දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017



ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 20 - ஜுன் 15, வியாழன்

## ரமழான்

தொழுகை நேரங்கள்

| ஸ.முடிவு | சுபஹ் | சூ.உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 04:17 | 04:32 | 05:55 | 12:12 | 03:39 | 06:27 | 07:44 |

மேற்குறித்த நேரத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு 6 நிமிடங்கள் குறைத்து கணிப்பிடவும்



இலங்கை ஹஜ் பயண ஏற்பாடுகளும் ஹஜ் கட்டணமும் ஓர் ஆய்வு

09

சங்காவின் நூறாவது

100

12

## 14,022 கிராமசேவகர் பிரிவுகளில் பொதுஜன பெரமுன கிளைகள்: பஸிலிடம் பொறுப்பு ஒப்படைப்பு



பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில் பொது ஜன பெரமுன நாடு முழுவதிலும் 14022 கிளைகளை அமைப்பதற்கு முடிவு செய்துள்ளது.

நாட்டின் சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி கட்சியின் கிளைகளை அமைக்கும் பணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. கட்சி இதற்கான பொறுப்பினை முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# இன,மத வன்முறைகளை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள்



## பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பர்! பிரதமர் அறிவிப்பு

ஒரு மதத்திற்கு, ஒரு இனத்திற்கு எதிராக வெறுப்புக்களையும், வன்முறைகளையும் தூண்டுவோருக்கு எதிராக சட்டரீதியாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரவை நேற்றுமுன்தினம் தீர்மானித்ததாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றது, இந்த நாட்டில் நல்லிணக்கத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கே என்று அவர் கூறினார். 30 ஆண்டு காலமாக யுத்தத்தில் இருந்த நாம், அதன் பின்னர் இந்த நாட்டு மக்களை இணைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல தீர்மானித்தோம் என்றார். நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற விஷேட ஊடக சந்திப்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு

11 »»»»

## அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு ஐ.நா.விடமிருந்து 4 மில். டொலர்

■ ஆதில் அலி சப்ரி

வெள்ள மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட 120,000 இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மேலும் 4 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க ஐக்கிய நாடுகள்

11 »»»»

## இலங்கை கடற்படைக்கு என்றும் உதவுவோம் பாக்.தளபதி உறுதி



இலங்கை கடற்படையின் நடவடிக்கைகளுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளதாக பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அத்மிரல் மொஹமட் சகாவுல்லா தெரிவித்துள்ளார்.

11 »»»»

பௌத்த வாக்குவங்கியை இலக்குவைத்து

## இனவாதிகளை கட்டுப்படுத்த தவறும் நல்லாட்சி

ஐ.நா.வில் முஜீஸ் வஹாப்தீன்




■ ஆதில் அலி சப்ரி

சிங்கள பௌத்த வாக்கு வங்கியினை இலக்குவைத்து செயற்படும் நல்லாட்சி அரசாங்கம் இனவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கத் தவறியதால் கோர்க்கப்பட்ட மணி மாலையின் மணிகள் கழன்று சிதறுவது போன்று ஒன்றன் பின் ஒன்றாக முஸ்லிம்களுக்கெதிரான இனவாத நடவடிக்கைகள் தொடர்வதாக சர்வதேச மனித

11 »»»»

## ஜனாதிபதிக்கு சூனியம்; செப்பு தகடுகள் மீட்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சூனியம் செய்ததாக கூறப்படும் செப்புத் தகடுகள், இரண்டு இளைஞர்களால் மீட்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம், பதவிய, கெப்பதிகொல்லாவ பிரதான வீதிக்கு அருகிலுள்ள உஸ்கல்ல மயானத்தில் இருந்தே இந்த செப்புத் தகடுகள் மீட்கப்பட்டுள்ளன.

11 »»»»

## சூனியம் செய்து என்னை அச்சுறுத்த முயற்சி நான் நிலைகுலைய மாட்டேன் - ஜனாதிபதி

சூனியம் வைத்தேனும் என்னை அச்சுறுத்த முயற்சிக்கின்றனர். சூனியங்களுக்கு நான் ஒருபோதும் நிலைகுலையமாட்டேன். பதிலாக மேலும் சக்தி பெறுவோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கூறினார்.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் 38ஆவது ஆண்டு நிறைவையிட்டு ஐ.ரீ.என். கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். ஐ.ரீ.என். நிறுவனத்

11 »»»»

## ஞானசார தேரரை உருவாக்கியது யார்?

## ரணிலிடம் கேளுங்கள்

விஜேசிறி எம்.பி.க்கு றிசாத் சாட்டை



பொதுபல சேனா இயக்கத்தின் செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரரை உருவாக்கியது யார்? என்று தாங்கள் அங்கம் வகிக்கும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஞானசார தேரர் உருவாகுவதற்கு அமைச்சர்

11 »»»»

## ஊடக மாநாட்டில் சர்ச்சையை ஏற்படுத்திய பொதுபலசேனா - ஞானசார விவகாரம்

செய்தியாளர் கேள்விகளுக்கு காரசாரமான பதில்

■ அ.அருண் பிரசாந்த்

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் இனவாத சம்பவங்கள் மற்றும் ஞானசார தேரர்

11 »»»»

## நுகேகொடையில் கைதான ககுனோடு தொடர்பு பேணியோரிடம் விசாரணை

■ ஆதில் அலி சப்ரி

மகரகம, நுகேகொட பகுதி முஸ்லிம் கடைகளுக்கு தீமூட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தெஹிவலை சுகன் குமாரவுடன் நெருங்கிய தொடர்புகளை பேணிவந்த

11 »»»»

நவமணி



# இனக்கலவரமொன்றினை தோற்றுவிக்கவே முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள்

## ஐ.தே.க. அமைப்பாளர் ஹஸன் அலி குற்றச்சாட்டு



(நியாஸ் ஆதம்)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட கூட்டமே நல்லாட்சியிலும் முஸ்லிம் சமூகத்திற்கெதிராக தாக்குதல்களை மேற்கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹஸன் அலி தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்திற்கெதிராக அண்மைக் காலமாக இனவாதக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் தொடர்பில் அண்மையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டி நாட்டில் இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்க்கப் பட்டுள்ளன. இந்தவிடயத்தில் முஸ்லிம் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும். குறிப்பாக கடந்த ஆட்சிக் காலத்திலே சிறுபான்மை சமூகத்திற்கெதிராக ஏவிவிடப்பட்ட இனவாதக் குழுக்களே நல்லாட்சியிலும் சிறுபான்மை சமூகத்திற்கெதிராக செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முஸ்லிம்களுடைய வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல்கள் என்பன எரிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த நாட்டிலே வாழும் முஸ்லிம்கள் தங்களது பொருளாதாரத்தை இழக்கக்கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலைமையும் காணப்படுகிறது. இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும். இவ்வாறான செயற்பாடுகளை நல்லாட்சி அரசாங்கம் தொடர்ச்சியாக பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

பொதுபலசேனா அமைப்பு இன்று சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு முஸ்லிம் சமூகத்தையும், அவர்களினுடைய பொருளாதாரத்தையும் நசுக்குவதற்கு பாரிய சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக சிறுபான்மை மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களினால் இந்த நாட்டிலே வாழும் மக்கள் மத்தியில் இன விரிசல் ஏற்பட்டு மீண்டும் ஒரு இருண்ட யுகத்துக்கு இந்த நாடு செல்லக்கூடிய நிலைமைகள் உருவாகும்.

இன்று இந்த நாட்டிலே வாழும் சிறுபான்மை மக்கள் அச்சத்துடனே வாழ்ந்து வருகின்றனர். சிறுபான்மை மக்கள் இந்த நாட்டிலே நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழலினை உருவாக்கி அதனை நிரந்தரமானதாக ஆக்கித்தர நல்லாட்சி அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுதொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் கவனம் செலுத்த வேண்டும்.

இனவாதத்தினூடாக மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று எண்ணியவர்கள் இந்த நாட்டிலே சிங்கள, முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் கலவரங்களை ஏற்படுத்தி இந்த நாட்டை ஒரு இருண்ட யுகத்துக்கு கொண்டு செல்ல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இன்று எமது நாட்டினுடைய நல்லிணக்க செயற்பாடுகளை சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இனவாதத் தினை தூண்டி பிரச்சினையை ஏற்படுத்தி இந்நாட்டின் நற்பெய ருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கும் முயல்கின்றனர்.

புத்த பெருமானின் போதனைகளைப் பின்பற்றும் பௌத்த மக்கள் அன்பு, கருணை, காருண்யம் போன்றவற்றுடன் சிறுபான்மை மக்களுடன் ஐக்கியமாக வாழும் இக்காலகட்டத்தில் ஒரு சில இனவாதக் குழுக்களே பௌத்த மக்கள் மத்தியில் போலிப் பிரச்சாரங்களை மேற்கொண்டு சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. இவர்களின் செயற்பாடுகளை பௌத்த மக்களும் ஆதரிக்கவுமில்லை. எனவே இனவாத குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது நல்லாட்சியின் பொறுப்பாகும்.



கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸாக்கின்(ஜவாத்) ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மட்டுப்படுத்தப்பட்ட மருதமுனை நபா கரவலை மீனவர் சங்கத்திற்கு ஒரு தொகுதி மீன்பிடி வலை வழங்கிய நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கே.எம்.அப்துல் றஸாக் சங்கத்தின் தலைவர் நபாயிடம் வலையை வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்:-மருதமுனை நிருபர்)

## ஊடகவியலாளர் வல்லரசன் வைத்தியசாலையில் அனுமதி

(பதுளை மேலதிக நிருபர் வாஹிட் குத்தூஸ்)

தினக்குரல் பத்திரிகையின் பசறை நிருபரும் ஊவா மாகாண தமிழ் ஊடகர் ஒன்றியத்தின் பொருளாளருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் பசறை இரா. வல்லரசன் கடும் சுகயீனமுற்ற நிலையில் பதுளை மாகாண பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஊடக பணிபுரியும் பதுளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினருமான இராமநாதன் வல்லரசன் தீவிர சிகிச்சை க்குட்படுத்தப்பட்டுள்ளார்.

யுனி மீடியாவின் தலைவரும் மாவட்ட ஊடக சங்கத்தின் பொருளாளருமான எம். செல்வராஜா வல்லரசன் நலனில் முன்னின்று கவனித்து வருகின்றார். ஊடகர்கள் கல்வியியளார்கள் அரசியல் பிரமுகர்கள் அபிமானிகள் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உயர்தர மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு

(வெலிகம நிருபர்)

இம் முறை ஆகஸ்ட் மாதம் க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதியும், உயர் தரப் பரீட்சையின் பெறுபேற்றை உயர்த்தும் நோக்குடனும் வெலிக பிரிலியண்ட் கல்வி அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இலவச கல்விக் கருத்தரங்கின் இரண்டாம் கட்டம் இன்று 15ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக் காலப்பகுதியில் தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்காகன கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. தென் மாகாண பாடசாலைகளின் மாணவர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். பாடசாலை சீருடையுடன் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

கடந்த 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை கலைப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெற்றன. இக் கருத்தரங்குகள் வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) வெபா மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறுகின்றது.



கல்முனை கல்வி வலய கல்விசாரா, கல்விசார் உத்தியோகத்தர்களும், பாடசாலை அதிபர்களும் இணைந்து ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல் தலைமையில் நேற்று வலயக்கல்வி அலுவலக திறந்த வெளியரங்கில் நடைபெற்றது. கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ. நிஸாம் உட்பட திணைக்கள தலைவர்களும் பிரதேச அரசியல் பிரமுகர்கள் , அதிபர்களும் மற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் , ஆசிரிய ஆலோசகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(படம் - கல்முனை நிருபர்- ஹனிபா ஜெனீர்)

# முதலாம் ஆண்டு மாணவர் சார்பில் கல்விசாரா ஊழியர்களுக்கு அநீதி

## கல்விசாரா சங்கம் கல்வியமைச்சருக்கு கடிதம்

(மொஹொமட் ஆஸிக்)

2018ஆம் ஆண்டுக்கான அரச பாடசாலைகளில் முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் சுற்று நிருபத்தின் மூலமும் கல்வித்துறையில் சேவையாற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாக கல்வித்துறை கல்விசாரா ஊழியர் சங்கம், கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவச த்திற்கு அறிவித்துள்ளது.

கல்வித்துறை கல்விசாரா ஊழியர் சங்கத்தின் செயலாளர் அஜித் கே. திலகரத்னவினால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது.

2006ஆம் ஆண்டு முதல் கல்வித் துறையில் இருந்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்தையின் பின் கல்வித் துறையில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்களது குழந்தைகளுக்கும் முதலாம் ஆண்டிற்கு ஒரு சத வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டது. அது வரை கல்வித்துறை ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நான்கு சத வீத கோட்டா ஐந்து சதவீதமாக உயர்த்தப்பட்டதன் மூலம் கல்விசாரா ஊழியர்களுக்கு இது வழங்கப்பட்டது. இருந்தபோதும் இச் சுற்றுநிருபத்தில் பாரிய குறை காணப்பட்டது. கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 25 புள்ளிகளும் மற்ற வர்களுக்கு 15 புள்ளிகளும் வழங்க இதன் மூலம் ஒழுங்கு மேற்கொள்ளப் பட்டுள்ளது. கல்விசாரா ஊழியர்கள் சேவை செய்வதற்கு கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் சந்தர்ப்பம் இல்லாத வர்களுக்கு இதன் மூலம் பாரிய அநீதி ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக 2017.04.21ஆம் திகதி அமைச்சின் செயலாளருடன் நடாத்திய கலந்துரை யாடலின் போது இம்முறை சுற்று நிருபத் தின் போது அது நிவர்த்தி செய்வதாக உறுதி கூறிய போதும் இம் முறையும் இது நிவர்த்திசெய்யப்படவில்லை என்றும் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிற்ச ங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிவரும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அநுராதபுரம் பொலிஸ் வலயத்திலுள்ள பரசன்கஸ்வெவயில் இலங்கையின் 481ஆவது புதிய பொலிஸ் நிலையம் பொலிஸ் மா அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது. இவ் விழாவுக்கு வருகை தந்த பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர உள்ளிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகளை வரவழைப்பதையும் பிரமுகர் பதிவேட்டில் பொலிஸ் மா அதிபர் கையொப்பமிடுவதையும் படங்களில் காணலாம்.

(படம் -அநுராதபுரம் விசேட நிருபர் ஏ.பீர்தௌஸ்)

# கத்தார் வாழ் பெரியமுல்லை மக்களின் இப்தார் நிகழ்வு



(கத்தாரிலிருந்து முனாதிக் முஜீப்)

நீர்கொழும்பு பெரியமுல்லை நலன்புரிச் சங்கத்தினால் இரண்டாவது முறையாக கத்தார் வாழ் நீர்கொழும்பு பெரியமுல்லை மக்களுக்கான ஒன்றுகூடலும் இப்தார் நிகழ்வும் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வு அண்மையில் கத்தாரில் உள்ள இலங்கை உணவகமான லக்மீம உணவகத்தில் நீர்கொழும்பு பெரியமுல்லை நலன்புரிச் சங்கத்தின் கத்தார் கிளையின் தலைவர் எம்.டி.எம் அஸ்மீர் (அம்பி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கத்தாரில் வேலைபுரியும் நீர்கொழும்பு பெரியமுல்லை வாழ் மக்கள் சுமார் 150 இற்கும் மேற்பட் டோர் கலந்து கொண்டார்கள். அதுபோல் கத்தாரில் குடும்பமாக வாழும் பெரியமுல்லை மக்களும் தம் குடும்பங்களுடன் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் போது இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுமுகமாக ஸதகா பணமும் திரட்டப்பட்டது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தொழுகை அறை திறப்பு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு தொழுகை அறை வசதியை ஏற்படுத்தி கொடுத்துள்ளதாகவும் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களில் தொழுகையை நிறை வேற்றக் கூடியவர்களுக்கும், நாளாந்தம் சிகிச்சைக்காக வருபவர்கள், நோயாளிகளைப் பார்வையிட வருபவர் கள் மற்றும் வைத்தியசாலை முஸ்லிம் ஊழியர்களுக்கு அவ்வப்போது தொழு கையை தாமதமின்றி உரிய நேரத்தில் தொழுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.முஹம்மதியா ஜும்ஆ மஸ்ஜிதின் தலைவர் எம்.ஏ.சி. முபீன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழுகை அறையின் தேவை தொடர்பாக யாழ். முஹம்மதியா ஜும்ஆ மஸ்ஜிதின் தலைவர் எம்.ஏ.சி. முபீன் முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சராக இருந்த எம்.ரீ.ஹஸனலி யிடம் கடந்த (2015.06.01) இல் எழுத்து மூலமாக விடுத்த வேண்டு கோளிற்கு அமைய மேற்படி வைத்திய சாலையின் பணிப்பாளர் பி. பசுபதிராஜா வினால் வழங்கப்பட்ட அறையொன்றில் தொழுகைக்கான வச திகளை ரி.எம். றுசான், எம்.யு.எம். தாஹிர், எம்.ஏ.சி. முபீன் ஆகியோர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.



எனவே, மேற்படி தொழுகை அறை யில் தொழுகைக்காகச் செல்பவர்கள் நோயாளிகளுக்கோ அல்லது கடமையில் இருக்கும் ஏனைய சமூக சகோதரர்க ளுக்கோ இடையூறுகள் ஏற்படாதவாறு தமது கடமையை நிறைவேற்றுவதுடன் குறித்த தொழுகையறைச் சுற்றாடலையும் தூய்மையாகப் பேணிக் கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிப்பதுடன் முன்னாள் அமைச்சருக்கும், வைத்தியசா லைப் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவ்வைத்திய சாலையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களே அதிகம் வைத்தியச் சிகிச்சை பெறுகின்றனர். இவ்வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுபவர்கள், அங்கு வரும் முஸ்லிம்கள் மற்றும் இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல தரத்திலான முஸ்லிம் ஊழியர்களும் நீண்ட காலமாக யாழ் போதானா வைத்திய சாலையில் ஒரு தொழுகை அறை இல்லாது தமது ஐங்காலக் கடமையான தொழுகையை நிறைவேற்றுவதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வந்துள்ள நிலையில், இவ் வைத்தியசாலையில் ஒரு தொழுகை அறை வேண்டும் என்ற பலரது நீண்ட நாள் கனவு தற்போது நிறைவேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இனவாதத்தை தூண்டுவோர் எந்த ஆடையில் வந்தாலும் சட்டம் நிலைநாட்டப்படும்



## அமைச்சர் மங்கள

(எம்.ஆர்.எம்.வஸீம்)

தேர்தல் ஒன்றின் மூலம் அதிகாரத்துக்கு வரமுடியாதவர்கள் நாட்டுக்குள் இனவாதத்தை தூண்டிவருகின்றனர். அடிப்படைவாதத்தை ஏற்படுத்துபவர்கள் எந்த ஆடையில் வந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்ட பின்வாங்கமாட்டோம் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக சேவையின் 38ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 5 மாடி கட்டிட தொகுதியை திறந்துவைக்கும் நிகழ்வு பத்தரமுல்ல சுயாதீன தொலைக்காட்சி சேவை தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் நாட்டின் அபிவிருத்தி, மக்களுக்கு சிறந்த தகவல்களை வழங்கும் நிறுவனமாக செற்பட்டு வருகின்றது. என்றாலும் கடந்த காலத்தில் இந்த நிறுவனம் பெயருக்கு மாத்திரமே சுயாதீனமாக செயற்பட்டது. ஒரு குடும்பத்தின் அரசியல் தேவைக்காக, எதிர்க்கட்சிக்கு சேறுபூசுதல், செய்திகளை திரிபுபடுத்தல் மற்றும் ஒருசாராருக்கு மாத்திரம் செயற்படும் நிறுவனமாகவே செயற்பட்டு வந்தது.

என்றாலும் மக்களுக்கும் நாட்டுக்கும் கிடைத்த வரமாக 2015 ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டை புதிய பாதைக்கு கொண்டுசெல்ல ஆரம்பித்தார். அதன்மூலம் மீண்டும் இந்த நாட்டில் நல்லாட்சி, ஜனநாயகம், சுதந்திரம், குறிப்பாக ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட்டுள்ளது. அதேபோன்று அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் கடத்தல், கொலைசெய்யப்படுதல் யுகம் இல்லாமலாக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஊடகங்களுக்கு உரிய சுதந்திரத்தை வழங்கியதாலும் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்பட சந்தர்ப்பம் அளித்தமையாலும் ஜனாதிபதியே இன்று ஊடகங்களால் அதிகம் விமர்சிக்கப்படுகின்றார். இவ்வாறு விமர்சிக்கப்பட்டாலும் நாங்கள் மீண்டும் ஊடக அடக்குமுறைக்கு செல்ல மாட்டோம்.

மேலும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அர்ப்பணிப்பின் காரணமாக 69 வருடங்களுக்கு பிறகு நாட்டில் முட்டிமோதிக்கொண்டிருந்த இரண்டு பிரதான கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. நாட்டின் முன்னேற்றம், அபிவிருத்தியை மாத்திரம் கருத்திற்கொண்டே இந்த 2 கட்சிகளும் தங்கள் மோசமான அனுபவங்களை எல்லாம் ஒருபக்கத்தில் வைத்து கூட்டு சேர்ந்துள்ளன. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு நாட்டை முன்னேற்றி எமது எதிர்கால சந்ததியினருக்கு சிறந்ததொரு எதிர்காலத்தை வழங்குவதற்கு முயற்சிக்கவேண்டும்.

சிலர் நாட்டில் இருக்கும் முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில், சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அதேபோன்று தமிழ்,முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இந்த அடிப்படைவாதிகளுக்கு எதிராக நாங்கள் அனைவரும் அணிதிரளவேண்டும் என தெரிவித்தார்.

# ரயிலில் மோதி 210 பேர் பலி

2017 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் தற்போது வரை புகையிரதத்தில் மோதி 210 பேர் பலியாகியுள்ளதாக புகையிரத பாதுகாப்பு பிரிவு தெரிவித்தது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 50 வயதுக்கும் குறைவானவர்களே அதிகம் என்றும், கோட்டை மற்றும் பொல்கஹவெலை பிரதேசத்தை நோக்கி பயணிக்கும் புகையிரதங்களிலேயே அதிகளவில் மோதி உயிரிழப்பதாகவும் குறித்த பிரிவு குறிப்பிட்டது.

புகையிரதங்களில் மோதி வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவானோர் பலியாகினர். எனினும், புகையிரத பாதுகாப்பு பிரிவு முன்வந்து குறித்த பிரதேசங்களில் எச்சரிக்கை பலகை, அவதானம் பதாகைகளை காட்சிப்படுத்தியமையால் உயிரிழப்போரின் எண்ணிக்கை சற்று குறைவடைந்துள்ளதாகவும் அத்திணைக்களம் சுட்டிக்காட்டியது.

புகையிரத மார்க்கங்களில் பயணிப்பது சட்டவிரோதமானது என்றும், அவ்வாறு பயணித்த 80 இற்கும் மேற்பட்டோர் மீது கடந்த மாதங்களில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. அத்தோடு, சமிக்ஞை விளக்கு போடப்பட்டிருக்கும் நேரங்களில் புகையிரத குறுக்கு பாதையில் வாகனங்களை செலுத்துதல், அவ்வாறான நேரத்தில் புகையிரத பாதையில் நடந்து செல்லல் ஆகியோரை கைதுசெய்ததாகவும், எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சட்டங்கள் அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டது.

இவ்வாறான புகையிரத விபத்துக்களில் 75 வீதமானோர் புகையிரத கடவையை கடப்பதன் மூலமே பலியாவதாகவும், நபர்களின் கவனயீனமே இதற்கு காரணம் என்றும் புகையிரத பாதுகாப்பு பிரிவு சுட்டிக்காட்டியது.

# கைதிகள் இல்லாத சமூகத்தை உருவாக்க பாடுபடவேண்டும்

## ஜனாதிபதி





சிறிய குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை செலுத்தமுடியாமல் சிறைகளிலுள்ளோருக்காக எதிர்காலத்தில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை சிறைக்கைதிகள் நலன்புரி சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

கைதிகள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்காக அனைவரும் பாடுபடவேண்டும். சிறைகளில் உள்ளவர்களை மனிதாபிமானத்துடன் நோக்கி அவர்கள் அந்த நிலைக்கு வருவதற்கு காரணமான சமூக நிலைமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அனைவரின் பொறுப்பாகும். கைதிகளில் 46.4 சதவீதமானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் காரணமாக சிறையிலிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அது 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தெளிவான அதிகரிப்பாகும். அவர்கள், போதைபொருள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தலின் வினைத்திறனை அது காட்டுகின்றது. எவ்வாறாயினும் போதைப்பொருளற்ற சமூகத்தை உருவாக்குவதற்காக இதனைவிடவும் வினைத்திறனான திட்டத்தின் தேவை ஏற்பட்டுள்ளது.

கைதிகளின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டது.

# சட்டவிரோத நீர் பெற்ற 625 பேரிடம் 2.5 கோடி தண்டம் அறவீடு

கொழும்பு நகரில் சட்டவிரோதமாக நீரினை பெற்ற 623 பேரிடம் 2017 ஆம் ஆண்டு கடந்த 5 மாதங்களில் சுமார் இரண்டரை கோடி ரூபா தண்டப்பணமாக பெற்றுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்தது.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்த கடந்த 7 ஆம் திகதி வரையான காலத்தில் தண்டப்பணமான 2 கோடி 34 இலட்சத்து 62 ஆயிரத்து 554 ரூபாவில் ஒரு கோடி 92 இலட்சத்து 30 ஆயிரத்து 898 ரூபா தண்டப்பணம் பெறப்பட்டுள்ளதாக அச்சபை தெரிவித்தது.

குறித்த காலங்களில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் படி 5500 இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் தேவையில்லாமல் நீரினை பெற்றுகொள்வோரை கண்காணிப்பதற்காக இரவு பகல் பாராது சேவை செய்ய 5 குழுக்கள் ஈடுப்படுத்தப்பட்டுள்ளதோடு, கொழும்பில் மாத்திரம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் நீர்வழங்கல் வடிகாலமைப்பு உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்டத்தை மீளாய்வு செய்து மேற்கொள்ள வேண்டிய உரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான விசேட மீளாய்வுக் கூட்டமொன்று நேற்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஏ.சீ.எம்.நபீல், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கே.ஏ.அன்சார், பொது முகாமையாளர் தீப்தி சுமனசேகர, இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட உயரதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

# மாங்குளத்தில் பொருளாதார வலயமொன்றை அமைக்க திட்டம்


## டி.எம்.சுவாமிநாதன் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

வடக்கு மக்களின் வேலையில்லா பிரச்சினையை நீக்க வவுனியா, மாங்குளம் பகுதியில் 1000 ஏக்கர் விஸ்தீரணமான காணியில் பொருளாதார வலயமொன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

அண்மையில், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மாவட்டக்குழுக்கூட்டத்தில் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்பொருளாதார வலயத்தில் முதலீடு செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலர் விருப்பத்தை தெரிவித்திருப்பதாகவும், முதலீட்டுச் சபையின் பூரண தலையீட்டுடன் இந்த முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வரவிருப்பதாகவும் தெரிவித்தார்.

சுற்றாடல் நற்புறவான விதத்தில், சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்றவாறு உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதோடு, இவ்வலயத்தினால் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்களை பெற்றுகொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.




நாடளாவிய ரீதியில் தபால் தொழிற்சங்கங்களினால் தபால் பணி புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதால் இலட்சக்கணக்கான தபால் செய்யப்பட்ட கடிதங்கள் குவிந்துள்ளன. நேற்றும், நேற்று முந்தினமும் முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்தத்தால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதோடு, அனைத்து தபால் நிலையங்களும் மூடப்பட்டு உள்ளதை காணலாம்.

# இலங்கை - இந்தியாவுக்கிடையில் புதிய விமான சேவை ஆரம்பம்

ஜூலை மாதம் முதல் இந்தியாவுக்கான மேலும் மூன்று விமான சேவைகளை ஆரம்பிக்க ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி விசாகப்பட்டனம், ஹைதராபாத் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு முறையே ஜூலை 8, 12 மற்றும் 16 ஆம் திகதிகளில் இந்த புதிய விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் மூலம் இந்தியாவின் சென்னை, திருவானந்தபுரம், திருச்சி, மும்பை, புது டில்லி, புத்தகயா, மதுரை, வாரணாசி, கொச்சி, பெங்களூர் மற்றும் கல்கத்தா ஆகிய நகரங்களுக்கான விமானப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# வியங்கல்லையில் பாதிக்கப்பட்டோருக்கு நபவிய்யா இளைஞர் அமைப்பு உதவி









(பேருவளை பி.எம்.முக்தார்)

களுத்துறை மாவட்டத்திலுள்ள வியங்கல்லை பகுதியில் மண் சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும், மக்களுக்கும் மற்றும் பள்ளிவாசல் ஒன்றுக்கும் 15 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரண தொகுதியை நபவிய்யா முஸ்லிம் இளைஞர் அமைப்பு அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த உபகரணத் தொகுதி கையளிக்கும் வைபவம் வியங்கல்லை முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

காதிரிய்யத்துந் நபவிய்யா தரீக்காவின் ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல்.ஆலிமுல் பாழில் அஷ்ஷெய்கு காமில் அஹமத் ஆலிம் பின் முஹம்மத் ஆலிம் காதிரியத்துந் நபவியின் வழிகாட்டலின் கீழ் நபவிய்யா முஸ்லிம் வாலிபர் அமைப்பு இந்த நிவாரண உதவி உபகரணத் தொகுதியை அன்பளிப்புச் செய்தது.

மேன் முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் இலங்கை தகவல் அறியும் ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.டப். அப்துல் ஸலாம், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அப்துல் கபூர், சட்டத்தரணிகளான அப்துல் ஹதீப், பைரூஸ் மரிக்கார், அதிபர் எம்.எஸ்.ஏ. வாரின் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

250 பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பை, பாதணி, அப்பியாசப் புத்தகம் என்பன இதன்போது வழங்கப்பட்டது. மேலும் 100 குடும்பங்களுக்கு கேஸ் அடுப்பு வழங்கப்பட்டதோடு , வியங்கல்லை பள்ளிவஹேன முகியத்தீன் பள்ளிவாசலுக்கு ஜெனரேட்டர் இயந்திரமும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, வியங்கல்லைப் பகுதியில் வெள்ளத்தில் சிக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரமழான் மாதம் முழுவதற்கும் ஸஹர் நேர உணவு வசதி மற்றும் இப்தாருக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

# நடேஷ்டா கப்பல் இலங்கையில்

ரஷ்யா கடற்படையினரின் நடேஷ்டா என்ற கப்பல் நல்லெண்ண பயணமொன்றை மேற்கொண்டு நேற்றையதினம் கொழும்பு துறைமுகத்திற்கு வருகைத்தந்தது.

இந்த கப்பலானது இன்றும், நாளையும், நாளை மறுதினமும் தரித்து நிற்பதோடு, பாடசாலை மாணவர்களின் பார்வைக்காக திறந்துவைக்கப்படவுள்ளது. மேலும், இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் விளையாட்டுக்களிலும் குறித்த கப்பலில் வருகைத்தந்த அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.



NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
15th JUNE 2017 - THURSDAY

# மீண்டும் ஓர் அளுத்கம அனர்த்தம் ஏற்படாதிருப்பதற்கு....

தர்கா நகரை மையமாக வைத்து இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன் அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கலவரத்துக்கு இன்றுடன் மூன்றாண்டுகளாகின்றன.

ஆயிரம் வருடங்களுக்கு மேலாக நேசத்துடன் வாழ்ந்துவரும் சிங்கள - முஸ்லிம் மக்களது உறவுக்கு கறுப்புப்புள்ளியிட்ட அளுத்கம கலவரம் கடந்த அரசு காலத்திலே இடம்பெற்றது.

இரண்டு முஸ்லிம்களது உயிர்களைப் பலியெடுத்து, பதினொரு பேரைக் காயத்துக்குள்ளாக்கி, பலகோடி பெறுமதிமிகு உடைமைகளைச் சேதப்படுத்திய அளுத்கம கலவரத்தைத் தூண்டியவர்கள் யார் என்பது இன்றும் வெளிவராத நிலையிலேயே இருக்கின்றது.

இன்று அக்கலவரத்தைத் தூண்டி விட பிரதான காரணியாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்படும் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இன்று தலைமறைவாகி வாழும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

அளுத்கம கலவரம் போன்ற இன்னொரு கலவரம் இந்த நாட்டில் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இந்த நாட்டின் முஸ்லிம்கள், தமிழர்கள் மற்றும் சிங்கள மக்கள் 2015 ஜனவரி 8ஆம் திகதி இந்த அரசினை பதவிக்குக் கொண்டு வந்தார்கள்.

கடந்த அரசு காலத்தில் முஸ்லிம்களுக்கெதிராக மட்டும் 480 சம்பவங்கள் நடைபெற்றன. இந்த அரசு காலத்தில் அப்படியான சம்பவங்கள் இடம்பெற மாட்டாதென எதிர்பார்த்தாலும் இந்த அரசின் இருவருட காலத்தில் முஸ்லிம்களுக்கெதிராக நூற்றுக்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. கடந்த இரு மாதங்களுக்குள் மட்டும் 40 சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ஒரு சிறிய தொகையினரே இவ்வாறான சம்பவங்களைச் செய்து வருகின்றனர். சிறு குழுக்கள் செய்தாலும் சட்டமும் நீதியும் அமுல்படுத்தப்படாததினால் நாளுக்கு நாள் அவர்களது கை ஓங்கிவரும் நிலையே காணப்படுகின்றது.

இந்தச் சம்பவங்கள் நடப்பதற்கு இடமளிப்பதனால் நாட்டில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக கட்டி எழுப்பப்பட்ட சிங்கள, முஸ்லிம் ஒற்றுமை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது.

அளுத்கம சம்பவத்தினால் கால்களை இழந்த இரு முஸ்லிம் வாலிபர்கள் இந்த துயரச் சம்பவத்தின் அடையாளமாக இருக்கின்றார்கள்.

இரு இளைஞர்களும் இன்றும் ஊனமுற்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு தரமான ஒரு செயற்கைக் காலைக் கூட வாங்கிக் கொடுப்பதற்கு அரசோ, சமூகமோ நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

சமூகத்தின் உடனடிக் கவனம் இந்த விடயத்தில் செலுத்தப்படுவது அவசியமாகும்.

இதேநேரம் அளுத்கம போன்ற வெறுக்கத்தக்க கலவரங்கள் இந்த நாட்டில் ஏற்படாதிருப்பதனை உறுதி செய்வதே இன்றுள்ள முக்கிய தேவையாகும்.

இதற்கான கற்றாடல் கட்டமைப்புக்களை உருவாக்குவதில் அரசுக்கு பாரிய பொறுப்புள்ளது.





# அளுத்கம கறுப்பு ஜூனுக்கு மூன்று வருடங்கள் பூர்த்தி!

பீ.எம்.ஏம் றிஷாட்

அளுத்கம கலவரம் இடம்பெற்று மூன்று வருடங்களைக் கடந்துள்ளது. அந்தக் கலவரமானது இந்நாட்டில் அமைதியாகவும், சுமுகமாகவும் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களின் நிம்மதியையும், சந்தோஷத்தையும் அடியோடு பறித்து விட்ட சம்பவம் என்றே கூறவேண்டும். அந்தக் கலவரம் இடம்பெற்று மூன்று வருடங்கள் உருண்டோடியுள்ள நிலையில், அதனால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் இன்னமும் சரி செய்யப்படாமலேயே உள்ளன. குறிப்பாக சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் காணப்பட்ட பூர்வீக ஒற்றுமையில் ஏற்பட்ட களங்கம் இன்னும் ஓரிரு பகுதிகளில் தடையங்களாக காணப்படுகின்றமையை எவராலும் மறுக்க முடியாது.

இந்த நிலையில் இந்தக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு புதிய அரசாங்கம் உருவாகி சுமார் இரண்டரை வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் நீதி கிடைக்காமலும், அழிவுற்ற உடைமைகளுக்கான முழுமையான நிவாரணம் கிடைக்கப் பெறாமல் உள்ளமையானது, அளுத்கம கலவரத்தைத் தொடர்ந்து இந்த நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திலும் மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மழைவிட்டு தூவானம் போக வில்லை என்பதுபோல மைத்திரி - ரணில் நல்லாட்சி யிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் ஆங்காங்கே இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

கடந்த அரசாங்கம் அதாவது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதி அது. அந்த இறுதிப் பகுதியான 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இரவு முழு நாட்டையும் உலுக்கிப் போட்ட, ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் வேதனையிலும், பயத்திலும் ஆழ்த்திய அளுத்கம கலவரம் இடம்பெற்றது. பௌத்த பிக்கு ஒருவருக்கும், முஸ்லிம் வாகன ஓட்டுநருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இரு உயிர்களை இழக்கவேண்டிய அந்த துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றது. முஸ்லிம்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட ஒரு சில பேரினவாத சக்திகள் அன்றிரவு முஸ்லிம்களது பூர்வீக குடியிருப்பான அளுத்கம, பேருவளை மற்றும் தர்காநகர் பகுதிகளில் முஸ்லிம்கள் மீதும், முஸ்லிம்களது உடைமைகள் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஜூன் 15ஆம் திகதி நள்ளிரவு அளுத்கம, பேருவளை, தர்காநகர் போன்ற பகுதிகளில் மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகள் துண்டிக்கப்பட்டிருந்த நிலையில், பேரினவாதிகள் முஸ்லிம்களது வீடுகளையும், பள்ளிவாசல்களையும், கடைகளையும் உடைத்தும், தீக்கிரையாக்கியும் பலர் மீது பொல்லுகளாலும், கற்களாலும், ஆயுதங்களாலும் தாக்குதல்களை மேற்கொண்டனர். அளுத்கம, தர்காநகர், பேருவளை, பெந்தர, வெலிப்பன்ன ஆகிய பகுதிகளில் காணப்பட்ட முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் தொழிற்சாலைகள் போன்றவற்றை திட்டமிட்டு அழித்தொழிக்கும் நாசகார அடாவடித்தனங்கள் மும்முரமாக அரங்கேறியது. இந்தத் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு முஸ்லிம் சகோதரர் கள் உயிரிழந்ததுடன், 11 பேர் காயமடைந்தனர். இவர்களில் இருவர் தமது கால்களை இழந்து இன்றும் ஊனமுற்ற நிலையில் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். பேரினவாதிகள் அளுத்கமை நகரிலுள்ள அழகுசாதன விற்பனை நிலையமொன்றை 2014ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி தீக்கிரையாக்கியதின் ஊடாக முஸ்லிம்கள் மீது தமக்கிருக்கும் வெறுப்பினை வெளிப்படுத்த முற்பட்டனர். அதனை முஸ்லிம்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாமையால், பேரினவாதிகளது சதித் திட்டம் புஷ்வாணமானது. இந்த நிலையில் சில தினங்களுக்கு பின்னர் தர்கா நகரில் பிக்கு ஒருவரது வாகன சாரதிக்கும், முஸ்லிம் இளைஞர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாய் மாறியது. இதனால் பிக்கு ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார். இவ்வாறு சிறு சிறு சம்பவங்களாக ஆரம்பிக்கப்பட்ட பிரச்சினை ஜூன் மாதம் 15ஆம் திகதி பொசன் போயா தினத்தன்று கலவரமாக மாறும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. அன்றைய தினம் அளுத்கம நகரில் கடும்போக்குடைய பேரினவாத சக்திகள் கூட்டமொன்றை நடத்தி முஸ்லிம்களுக்கு எதிரான விஷமக் கருத்துக்களை பிரசாரம் செய்தனர்.

இக்கூட்டத்தில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் முஸ்லிம்களுக்கு எதிராக காரசாரமான கருத்துக்களை முன்வைத்தார். அபசரனே என்று அவர் கூறிய கூற்று இந்த குழப்பத்துக்கு காரணமாக அமைந்ததாகக் கூறப்படுகின்றது. இந்தக் கருத்தானது முஸ்லிம்களுக்கு எதிரான பௌத்த மக்களை தூண்டும் விதத்தில் அமைந்திருந்தது. அதனைத்தொடர்ந்து அன்றைய தினம் பிற்பகல் ஊர்வலமாக சென்ற பொதுபலசேனா தலைமையிலானோருக்கும், தர்கா நகர் முஸ்லிம்களுக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து மறுநாள் காலை வரை முஸ்லிம் கள் மீதும், முஸ்லிம்களது உடைகள், விற்பனை நிலையங்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. கடைகள், விற்பனை நிலையங்கள், பண்ணைகள் என்பன எரியூட்டப்பட்டன. வீடுகள் அடித்து நொருக்கப்பட்டதுடன், பல வீடுகள் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டன. துப்பாக்கிகள், வாள், கத்தி, பொல்லுகள், பெற்றோல் குண்டுகள், கற்கள் என்பவற்றை பயன்படுத்தியே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இச்சம்பவங்கள் இடம் பெற முன் இனவாதக் குழுவின் அட்டகாசம் தொடங்கவே இதைக் கட்டுப்படுத்தப்



போவதாகவும் இப்பகுதியில் வாழும் முஸ்லிம்களை வீட்டில் அடைத்து வைக்கும் நோக்கில் மேலிடம் அளுத்கம பொலிஸ் பிரிவில் அவசரகால சட்டத்தை மாலை 5.55 மணிக்கு அமுலாக்கி முஸ்லிம் களை ஓரம்கட்டிவிட்டு இனவாதக் குழுவை சுதந்திர மாக இப்பகுதியில் நடமாட விட்டு அநியாயங்களை அரங்கேற்றினார்கள். அவசரகால சட்டத்தை அமுல் படுத்தும் நோக்குடன் 2500க்கும் மேற்பட்ட பொலிஸ், விசேட அதிரடிப் படையினர் நவீன ஆயுதங்களுடன் பாதுகாப்புக்காக ஆயுதம் தாங்கிய பொம்மைகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இனவாதிகள் மிகச் சுதந்திரமாக மூன்று மணி நேரத்திற்குள் வெறியாட் டம் ஆடி எல்லாவற்றையும் நாசம் செய்தார்கள். அங்குள்ள முஸ்லிம்களின் நகை, பணம், உபகரணங்கள் என்பனவும் கொள்ளையிடப்பட்டன. பேரினவாதிகளது தாக்குதலுக்கு இலக்காகி முஹம்மட் சிராஸ் என்ற 2 பிள்ளைகளின் தந்தையும், மொஹமட் சஹ்ரான் எனும் 3 பெண் பிள்ளைகளின் தந்தையும் உயிரிழந்தனர். அத்துடன், 80க்கும் மேற்பட்டோர் துப்பாக்கி சூடு மற்றும் தடியடி தாக்குதல்களுக்கு இலக்காகி காயமடைந்தனர். இவர்களில் 22 வயதுடைய அப்கர் மற்றும் 18 வயதுடைய அஸ்ஜத் ஆகிய இரு இளைஞர்கள் தமது கால்களை இழந்த நிலையில் இன்னமும் ஊனமுற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சுமார் ஒருவார காலமாக அந்தப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தது. ஒரு சில பகுதிகளில் பௌத்த மக்கள் பேரினவாதிகளது தூண்டுதல்களால் இரவு வேளைகளில் முஸ்லிம்களது உடைமைகளுக்கும், பள்ளிவாசல்களுக்கும் கற்களை கொண்டு தாக்குதல்களை மேற்கொண்டனர். இராணுவத்தினரை பாராமுகமாக இருக்குமாறு மேலிடத்திலிருந்து உத்தரவிட்ட அந்த மேலதிகாரி யார்? காவல் துறையினர் இந்த அநியாயத்தை தடுக்க முயற்சி எடுக்காமைக்குக் காரணம் என்ன? என்பன இப்பகுதி வாழ் மக்களின் கேள்விக்குறியாகும். இந்தக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களது வீடுகளை புனர்நிர்மாணம் செய்து கொடுக்குமாறு இராணுவத்தினரைப் பணித்தார். அத்துடன் உயிரிழந்தவர்களது இரு குடும்பங்களுக்கும் தலா 1 இலட்சம் ரூபா வீதம் நஷ்டஈட்டை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்க்கப்பட்ட இவ்வன்செயல் காரணமாக மேற்படி பிரதேசங்களில் 223 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவற்றுள் 72 வீடுகள் முற்றாக சேதமாக்கப்பட்டதுடன், 151 வீடுகள் பாதியளவு சேதமடைந்தன. இதேபோன்றே 83 வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டு அவற்றுள் 55 கடைகள் முற்றாக எரித்தும், உடைத்தும் அழிவுக்குள்ளாகின. 28 கடைகள் பாதியளவு தாக்கி அழிக்கப்பட்டிருந்தன. மேற்படி வன்முறை நிகழ்வுகள் யாவும் உடனுக்குடன் சர்வதேச மயப்படுத்தப்பட்டதால், இது குறித்து கவனம் செலுத்த வேண்டிய நிலைக்கு முன்னைய அரசு தள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட கடை வீடுகளைப் புனரமைத்துக் கொடுக்க அரசாங்கம் துரித நடவடிக்கைகளில் இறங்கியது. இதற்காக 182 மில்லியன் ரூபா பணத்தினை ஒதுக்கியது. இராணுவ ஜெனரல் உபய மெதவல தலைமையிலான இராணுவக் குழுவொன்றின் ஒத்துழைப்புடன் கட்டிட புனரமைப்புப் பணிகளில் கிட்டத்தட்ட 98 சதவீதமான அளவு பூர்த்தி செய்யப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 223 வீடுகளும், 91 கடைகளும் பூரணமாக திருத்தியமைக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

எனவே மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் தொடர்ச்சி யாக 4 வருடங்களாக இந்நாட்டு முஸ்லிம்கள் மிக மோசமான துன்பத்தை அனுபவித்தனர்.முஸ்லிம்கள் மானசீகமான முறையில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு



உட்படுத்தப்பட்டனர். மஹிந்தவின் ஆட்சியில் பலம் பெற்ற சிங்கள, பௌத்த தீவிரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசப்பற்றாளர்களது அடக்குமுறையாலும் துன்புறுத்தல்களாலும் முஸ்லிம் சமூகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் கடந்த அரசாங்கமானது இந்தக் கலவரத்தின் போது காத்த மௌனமானது இந்த நாட்டில் புதிய ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்த வழியமைத்தது. முஸ்லிம்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது வெறுப்பை கொண்டனர்.பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களது மனங்களை வெல்ல நிவாரணங்களை கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், எதிரே வந்த தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிக்கு தோல்வியே கிட்டியது. இந்நாட்டில் வாழும் எல்லா இன மக்களும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் அவர்களது மத சுதந்திரத்தை எவ்வித பாதிப்புமின்றி செயற்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என உறுதியாகக் கூறியமையால் முன்னாள் அரசுக்கு தகுந்த பாடம் புகட்டவென இந்நாட்டில் வாழும் மூவின மக்களும் ஒன்றிணைந்து நல்லாட்சியை ஏற்படுத்தினார்கள். ஆனால் முன்னாள் ஆட்சியில் அரசின் ஆதரவுடன் இந்தப் பகுதியில் பேயாட்டம் ஆடிய அந்த இனவாதக் குழு மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாய் இப்போதும் சுதந்திரமாகவும் முன்னரைவிட பல மடங்கு தைரியத்துடனும் அன்று அவர்கள் இப்பகுதியில் மாத்திரம் ஆடிய பேயாட்டத்தை இன்று நாட்டின் நாலா பாகங்களிலும் முஸ்லிம்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை, பொருளாதார வளர்ச்சியை அடியோடு இல்லாமல் செய்ய, கருவறுக்க பகிரங்கமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இதனைக் கண்டும் காணாத போக்கில் நல்லாட்சி அரசு கண்மூடியும், எதுவித காத்திரமான அறிக்கையை வெளியிடாது வாய்மூடியும் மௌனம் சாதிப்பது எதற்காக?

எந்தக் கலவரம் இந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கியதோ அந்த அரசாங்கத்தினால் இதுவரையில் நீதியோ நியாயமோ, உரிய முறையிலான நிவாரணங்களோ கிடைக்கப்பெறவில்லை எனவும், விசாரணைக்குழு அமைக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பி லான விசாரணை களுத்துறை நீதிமன்றத்தில் இன்னமும் விசாரணையில் உள்ளது. வழக்கை முன்னெடுப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்காமையினால் வழக்கு தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகின்றது. தமக்கு பேரிழப்பை ஏற்படுத்தியவர்கள் குற்றவாளியாக இனங்காணப்பட்டவர்கள் தண்டனைக்குட்படுத்தப் படுவார்களா என்ற எதிர்பார்ப்புடன் வாழ்ந்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்விதமான நஷ்டஈடும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை என மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.இச்சம்பவங்கள் நடைபெற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தும் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகள் இன்றுவரையில் நிவர்த்தி செய்யப்படவில்லை. பின்னணியில் இருந்து செயற்பட்ட தலைவர்கள் யார் என்று பொதுமக்களால் இனங்காணப்பட்ட நிலையிலும் இவர்களுக்கு எதிராக இந்தச் சம்பவங்களை முற்படுத்தி ஏற்படுத்தப்பட்ட நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்காது மௌனம் சாதிப்பது ஏன்? புரியாத புதிராக இருக்கின்றது. இந்நிலையில் அளுத்கம சம்பவம் இடம்பெற்று 3 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு பாதிக்கப்பட்ட மக்களுடனும், குறித்த பகுதி அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பிரமுகர்கள் ஒரு சிலருடன் பெறப்பட்ட தகவல்கள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.

2014 ஜூன் 15ஆம் திகதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வது, அந்தக் கரிநாள் நாசம் ஏற்படுத்த உத்தரவிட்டவர்கள் யார்? இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி, பிரதமர் தாமதிப்பது ஏன்? இதை நல்ல முறையில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த தனிநபர் கமிஷன் ஒன்றை ஏற்படுத்த முன்வருவதில்லை. இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தினருக்கு இதன்பின்பு இப்படியான கலவரம் ஏற்படாமலும் பாதுகாக்க வேண்டியது நல்லாட்சி அரசி ன் கடனாகும்.

## அளுத்கம கலவரம் குறித்து ஆராய்வதற்கு விசாரணைக் குழு நியமிப்பதில் ஏன் தாமதம்?

ஏ.ஆர்.எம். பரீயூதீன்
பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவர்

அளுத்கம, தர்காநகர் வன்செயலின் போது பாதிக்கப் பட்ட மக்களுக்கு நீதி, நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்களிப்புச் செய்தவன் என்ற வகையில், இம்மாதம் 15ஆம் திகதியுடன் 3 வருடங்கள் பூர்த்தியாவதை மிகவும் கவலையுடன் தான் நினைவு கூர்கிறேன்.

இவ்வினக்கலவரம் நடைபெற்று மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், தற்போது அமைதி நிலவுகின்ற போதிலும், காழ்ப்புணர்ச்சி, அரசியல் ஆதாயம் கருதி ஒரு சில இனவாதிகளால் அவ்வப்போது பிரச்சினையை உருவாக்கும் தூண்டுதல்களுக்கு தூபமிடப்படுவதை உணர முடிகிறது. அப்போதைய அரசு துரிதமாக வீடுகள், கடைகளைப் புனரமைத்துக் கொடுத்தாலும் இன்றுவரை இப்புதிய அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நஷ்டஈடுகள் வழங்கப்படாமை ஒரு பெரும் குறை என்றே கூறவேண்டும்.

இவ்வாறு இச்சம்பவம் நடைபெற்று 3 ஆண்டுகள் கழிந்தாலும் ஐக்கிய தேசிய கட்சியின் பழமையான உறுப்பினராக என்னால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி கள் இதுவரை நிறைவேறாமல் போய்விட்டது.ஆனால் இப்புதிய அரசாங்கம் அளுத்கம கலவரம் குறித்து ஆராய விசேட ஆணைக்குழுவொன்றை உடன் நியமிக்க வேண்டும் என நான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்திடம் பல தடவைகள் தனிப்பட்ட முறையில் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

எனவே இதுதொடர்பில் உரிய கவனம் விரைவில் எடுக்கப்பட்டு விசாரணைக்குழுவொன்றை நியமித்து இக்கலவரத்துக்கு காரணமாக இருந்த அனைவருக்கும் தகுந்த தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் இழப்பீட்டை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# அனர்த்தத்திலிருந்து மீண்டுள்ளோம்; அறிவைப் பயன்படுத்தி முன்னேறுவோம்

## மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அப்துல் கபூர்

(பேருவளை நிருபர் பீ.எம். முக்தார்)

மழை, காற்று, வெள்ளம், பூமி அதிர்வு, சுனாமி, மண்சரிவு, தீவிபத்து போன்ற இயற்கை அனர்த்தங்களினால் நாம் சம்பாதித்து நிர்மாணித்த வீடு வாசல்கள், சொத்துக்கள் அழிந்து விடலாம் என்றாலும் எமது கல்வியை அவற்றினால் ஒருபோதும் அழிக்கவே முடியாது அண்மைய அனர்த்தம் எமது பௌதீக வளத்தை அழித்து விட்ட போதிலும் நமது அறிவை அழித்துவிடவில்லை. எனவே அறிவைப்பயன்படுத்தி மீண்டும் முன்னேறுவோம் என மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அப்துல் கபூர் கூறினார்.

வியங்கல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

கல்விச் செல்வம் என்றுமே அழியாது அது நாம் மரணிக்கும் வரையில் பயனைத்தரும். எனவே, மாணவர்கள் பல்வேறு கஷ்டங்கள் சவால்களுக்கு மத்தியில் கல்வியை சிறப்பாக கற்க வேண்டும் கல்வி தான் எமக்கு என்றும் கைகொடுத்து உதவும்.

காதிரியதுன் நபவியா தரீக்காவின் தலைமைத்துவம் சக்திமிக்கதாகும். இத்தலைமைத்துவத்தினூடாக சிறந்த சமுதாய பொதுப்பணிகள் இடம்பெறுகின்றன, அதன் ஓர் அங்கமாகவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. யாழ்ப்பாணம், மன்னார் மக்கள் பயங்கரவாதிகளினால் விரட்டியடிக்கப்பட்டார்கள். வீடு, வாசல்களை இழந்து அகதிகளாகி புத்தளத்திலும் ஏனைய பகுதிகளிலும் தஞ்சமடைந்தார்கள். அவர்களுடைய அறிவைப்பயன்படுத்தி அவர்கள் மீண்டும் முன்னேறினார்கள். வியங்கல்லைப்பகுதி பாடசாலை மாணவர்களின் கல்வி பாதிக்கக்கூடாது என்று ஆழமாகச் சிந்தித்த காதிரியதுன் நபவியா தலைமைத்துவம் உடனடியாக கற்றல் உபகரணங்களை வழங்க முன்வந்தது. கல்விச் செயற்பாடுகளுக்கு நபவிய்யா முஸ்லிம் இளைஞர் உதவிக்கரம் நீட்ட முன்வந்துள்ளதையிட்டு பாராட்டுகிறேன்.

முஸ்லிம்கள் அனைவரும் உடன் பிறப்புக்கள் எமது சகோதரர்களுக்கு ஏதும் அனர்த்தம் ஏற்பட்டால் உதவி செய்வது எமது கடமையாகும். மன்வாளை அனர்த்தத்தின் போதும் சுனாமியின் போதும் நபவிய்யா முஸ்லிம் இளைஞர் அமைப்பு வழங்கிய ஒத்துழைப்பு மறக்க முடியாததாகும் என்றார்.

இலங்கை தகவல் அறியும் ஆணைக்குழு உறுப்பினரும் மேன் முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசருமான ஏ.டப்ளியு அப்துஸ் ஸலாம் பேசும் போது ,

புஹாரித் தக்கியாவை வெறுமனே தொழுகை நடாத்துவதற்கும் வருடா வருடம் கந்தூரி கொடுப்பதற்கும் செய்லும் நாயகம் பயன்படுத்தவில்லை. மாறாக சமுதாய எழுச்சிக்கான ஒரு மத்தியஸ்தானமாகவும் பயன்படுத்துகிறது. புஹாரி தக்கியாவின் சக்திமிக்க தலைமைத்துவம் காரணமாக இவ்வாறான சமுதாயப்பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. கல்வி நடவடிக்கை இளைஞர்களுக்கு சிறந்த தலைமைத்துவ பயிற்சி இவ்வாறான அனர்த்தங்களின் போது உதவிக்கரம் நீட்டுவது போன்ற நல்ல பல வேலைத்திட்டங்கள் செய்வனே முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

பாடசாலை அதிபர் ஏ.எஸ்.எம். வாரிஸ், சட்டத்தரணிகளான அப்துல் வதீப், பைரூஸ் மரிக்கார், நபவிய்யா, முஸ்லிம் வாலிபர் அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

## முன்னாள் ஆளுநர் அலவியின் ஓராண்டு நினைவு தினம் இன்று

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

முன்னாள் ஆளுநர் அல்ஹாஜ் அலவி மௌலானா மறைந்து இன்று (15) வியாழக்கிழமை ஓராண்டு நினைவு தினமாகும். முஸ்லிம் சமுதாயம் மட்டுமன்ல, முழுநாடும் அவரை மறக்க முடியாது என முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

நினைவு தினம் பற்றி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

நாட்டிலும் சமுதாயத்திலும் ஒரு பிரதான இடத்தை வகித்து முஸ்லிம்களுடைய பிரபலமாகத் திகழ்ந்தவர் அலவி மௌலானா. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எஸ். டபிள்யு ஆர். டி பண்டாரநாயக்காவைப் பின்பற்றி ஒழுகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் முஸ்லிம்கள் இணைவதற்கு மிகவும் பாடுபட்டு உழைத்தார்.

என்னும் துரதிஷ்டவசமாக இன்று நல்லாட்சி என்று சொல்லக்கூடிய அரசாங்கத்தை முஸ்லிம்களும் சேர்ந்து ஆட்சியில் அமர்த்தியதும் முதல் அடி விழுந்தது அலவி மௌலானாவுக்குத்தான். அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இன்று 9 மாகாணங்களிலும் ஒரு முஸ்லிம் ஆளுநர் இடையாது என்பதனையும் இன்று முஸ்லிம் சமுதாயம் மிகவும் வருத்தத்தோடு கவனித்துக் கொண்டிருக்கின்றது.

எனவே அவ்லியாக்களை, மார்க்க மேதைகளை, அறிஞர்களை, கற்றறிந்தோரை மதித்த அலவி மௌலானாவுக்கு எல்லாம் வல்ல இறைவன் ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயரிய சொர்க்கம் கிடைக்க துஆச் செய்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## அல் - கப்ஜி தஃவா நிலையத்தின் ரமழான் பயான் நிகழ்ச்சி



(எம். ஆர். சியாகுர் ரஹ்மான்)

சவூதி அரேபியாவின் அல் - கப்ஜி தஃவா நிலையம் தூய இஸ்லாமிய மார்க்க பணியினை முன்னெடுத்து வருகின்ற ஓர் தஃவா நிலையமாக விளங்கி வருகிறது. அந்தவகையில் ரமழான் மாதத்தில் விஷேட பயான் நிகழ்ச்சி ஒன்றை அண்மையில் ஏற்பாடு செய்து நடாத்தியது. இதில் பறகஹதெனிய ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவினால் மாதாந்தம் வெளியிடப்படும் 'உண்மை உதயம்' இஸ்லாமிய சஞ்சிகையின் ஆசிரியர் அஷ்செய்க் இஸ்மாயில் (ஸலபி) சொற்பொழிவாளராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வு தஃவா நிலையத்தின் அழைப்பாளரும் பறகஹதெனிய தாருத் தௌஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடத்தின் பழைய மாணவருமான அஷ்செய்க் றிஸ்கான் முஸ்தீன் (மதனி) தலைமையில் இடம்பெற்றது. பயான் நிகழ்ச்சியில் இந்திய இலங்கையைச் சேர்ந்த சகோதரர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பு அல் இக்பால் முஸ்லிம் மகளிர் வித்தியாலய நூலகத்திற்கு புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவுநர் இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் ஒரு தொகை நூல்களை வித்தியாலய அதிபர் ஜனாபா ரெஹானா மர்சூக்கிடம் கையளிப்பதையும் கலைஞர் கலைச் செல்வன ஷப்ரான் ஏ. அஸீஸ் ரியாஸ்டீன் ஆகியோர் உடனிருப்பதையும் படத்தில் காணலாம்.

## அட்டாளைச்சேனை உணவகங்கள் சுகாதார அதிகாரிகளால் திடீர் சோதனை

(அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

புனித நோன்பு காலத்தில் பொதுமக்களுக்கு சிறந்த உணவுகளை வர்த்தக நிலையங்கள் மூலம் வழங்கும் பொருட்டு அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் நேற்று திடீர் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இச்சுற்றி வளைப்பின் மூலம் உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றிலிருந்து மனித பாவனைக்கு உதவாத சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அலாவுதீனின் வழிகாட்டலின் கீழ் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.எம்.மலீக் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் இச்சுற்றி வளைப்பினை மேற்கொண்டனர்.

இப்பரிசோதனையின் போது உணவகங்கள், பலசரக்கு சில்லறைக் கடைகள், வெதுப்பகங்கள், பழவிற்பனை நிலையங்கள், மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள், வீதியோர விற்பனைக்கூடங்கள் என்பன பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன்போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற காலாவதியான உணவு பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன், ஈக்கள் மொய்த்த உணவுகளும், சுகாதாரமற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உணவுப் பொருட்களும், சுகாதாரமற்ற நபர்களினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் பழுதடைந்த பொருட்கள் போன்றன



கைப்பற்றப்பட்டன.

இதன்போது சுகாதாரமற்ற முறையில் உணவகங்களை வைத்திருந்த மூன்று உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு அவர்கள் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

## கிழக்கு முதல்வர் நஸீர் தலைமையில் இப்தார் நிகழ்வு

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டின் அனுசரணையில் இன்று இப்தார் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இப்தார் நிகழ்வில் லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார். ஏறாவூர் அலிகார் தேசியப் பாடசாலையில் இடம்பெறவுள்ள இந்த இப்தார் நிகழ்வில் பங்கேற்க மூவாயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## வட மாகாண சபை நிர்வாகம் ஊழலின்றி செயற்பட வேண்டும்

### காதர் மஸ்தான் எம்.பி



பாரிய எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட வட மாகாண சபை ஊழலின்றி மக்களுக்களுக்காக செயற்பட வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்தார். நேற்றையதினம் பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் ஏற்பாட்டில் அவரது வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்ற இலவச கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வட மாகாண சபை மிக நீண்ட காலத்துக்கு பிறகு எமது மக்களின் பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும் எனினும் இப்பொழுது மாகாணசபைக்குள் நடப்பது என்னவென்றே விளங்கவில்லை.

வட மாகாணசபையில் ஊழல்கள் காணப்படுமாக இருந்தால் மக்களுக்கும் யாரை மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுப்பது என்ற கேள்விநிலை தோன்றியிருக்கின்றது. மக்கள் பிரதிநிதிகள் இழைக்கும் தவறுகளுக்கு மக்களின் தேர்வுகளில் பிழை என்பதை வட மாகாண சபை நிரூபித்து விடாமல் மக்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிய மாகாண சபையாக இருப்பதற்கான வழி வகைகளை தேடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

உண்மையில் யுத்தத்துக்கு பின்னர் வடக்கில் மீண்டும் தமிழ் மக்களின் கல்விநிலையில் வளர்ச்சி ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே அதற்கு வட மாகாண சபை மேலும் வலு சேர்க்க வேண்டும் ஆனால் இன்று கல்விக்கு வலு சேர்க்க வேண்டிய மாகாண கல்வியமைச்சில் ஊழல் , எமது பகுதிக்கே உரித்தானது விவசாயம் ஆனால் இங்குள்ள விவசாய அமைச்சிலும் ஊழல் என்றால் என்னதான் செய்வது. கடந்த ஆட்சியில் ஊழல் அதிகமாக காணப்பட்டதால் சிறுபான்மையினரின் மூலம் இந்த ஆட்சி கொண்டுவரப்பட்டது ஆனால் சிறுபான்மையினர் பெரும்பான்மையாக காணப்படும் வட மாகாணசபையில் ஊழல் என்றால் என்ன செய்வதென்று வட மாகாண மக்களே முடிவெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## றீதெனிய, ஜெயந்தியாய, நாவலடி குடிநீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### முதலமைச்சர் நஸீர் அஹமத்



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசத்திலுள்ள றிதிதென்ன, ஜெயந்தியாய கிராமங்களுக்கும் நாவலடி பிரதேச மக்களின் நிரந்தரமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

பிரதேச மக்கள் முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரம் முதலமைச்சர் நேற்றுமுன்தினம் அப்பிரதேசங்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் சகிதம் நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்தார்.

அங்கு விஜயம் செய்த முதலமைச்சரும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் அதிகாரிகளும் குறித்த பகுதிகளிலுள்ள கிணறுகள், நிலத்தடிக் குழாய் கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் நீரை நிரந்தரமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஏனைய வழிவகைகளையும் நீர் மாதிரிகளையும் ஆராய்ந்தனர்.

இந்த ஆய்வின் அடிப்படையில் வருடாந்த வறட்சிக் காலத்தில் றிதிதென்ன, ஜெயந்தியாய மற்றும் நாவலடி பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான செயற்திட்டங்கள் உடனடியாகத் தொடங்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை

உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர் M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P:077 2810009. WhatsApp: 077 9697790 Email - nrahmathullah786@yahoo.com

நவமணி



# நோன்பு ஒரு விருந்தாளியல்ல...

**உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்**

ரமழான் வந்துவிட்டால் எம்மில் பலர் ''நோன்பும் வந்துவிட்டது'' என்பார்கள். ஷவ்வால் தலைப்பிறை கண்டவுடன் ''நோன்பும் முடிந்துவிட்டது'' என்பார்கள். ஆம்! இவ்வாறு ''வந்துவிட்டது'', ''முடிந்துவிட்டது'' என்று எத்தனை ரமழான்களை வழியனுப்பிவிருப்போம்! எதிர்வரும் ரமழானும் அவற்றுள் ஒன்றாக சென்றுவிடத்தான் போகிறது. சந்தேகமில்லை. எனினும், நாம் எங்கே செல்லப் போகிறோம் என்பதே சந்தேகம்!

ரமழான் வெறுமனே வந்துவிட்டுச் செல்வதற்காக வருகின்றதொரு மாதம் சமூகம் கால்வைத்திருக்கும் மதீனாவின் ஆரம்பப் பொழுதுகள். மனித சமுதாயத்தின் விடுதலைக்கும், விமோசனத்திற்கும் பொறுப்புச் சொல்ல வேண்டிய ஒரு சமுதாயத்தின் உதய நேரம். அல்லாஹ்வின் கட்டளை வருகிறது.

''ஈமான் கொண்டவர்களே! (நோன்பு நோற்கத் தயாராகுங்கள்), உங்களுக்கு முன்னாலிருந்த சமுதாயத்திற்கு விதியாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்படுகிறது. (காரணம்?) நீங்கள் இறையச்சம் பெறலாம் (என்பதற்காக)''

பதினைந்து வருடங்களாக இறையச்சமின்றி வாழ்ந்த ஒரு சமூகத்துக்கு அல்லாஹ் இக்கட்டளையைப் பிறப் நிவர்த்தி செய்வதற்கும், ஒரு சவாலை எதிர்கொள்வதற்குமாக விதியாக்கப்பட்ட கடமை என்று மட்டும் எடுத்துக் கொள்ளலாகாது. மாறாக அது ஒரு இபாதத்.

இருப்பினும் இஸ்லாம் விதித்துள்ள (இபாதத்துகள்) வணக்க வழிபாடுகள் மறுமையை மட்டும் இலக்காகக் கொண்டு உலகத்தைப் புறக்கணிக்கும் இயல்பு கொண்டவைகளல்ல. மாறாக, உலக வாழ்க்கையை நெறிப்படுத்தி அதனூடாக மனிதனுக்கு விமோசனத்தை வழங்கும் நோக்கம் கொண்டவை.

அந்த வகையில் நோன்பின் உலகப் பயன்பாடுகளுள் ஒன்றை, ஸஹாபிகள் சமூகத்தின் வரலாற்றில் நாம் பார்க்க



அல்

ல. ரமழான் எங்களை அழைத்துச் செல்வதற்காக வருகின்ற மாதம். எனினும் அது எம்மை அழைக்கவில்லைப் போலிருக்கிறது. அல்லது அதன் அழைப்பு எங்களது செவிகளுக்கு எட்டவில்லைப் போலிருக்கிறது. அதனால்தான் ரமழான் எம்மை விட்டுச் செல்கின்றபோது ''ரமழானும் முடிந்துவிட்டது!'' என்கிறோம். ஏதோ அவசர அவசரமாக வந்துவிட்டுப் போன ஒரு விருந்தாளியைப் போல! விருந்தாளி எங்களை அழைத்துக் கொண்டு போக வருவதில்லையே!

ரமழான் ஓர் அழைப்பாளி. அழைப்பாளர் வந்தார் எனின், அவர் ஏன் வந்தார்? அவர் கொண்டு வந்த அழைப்பு எது? வந்த அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களா? அவரது அழைப்பு எந்த இலக்கை நோக்கி உங்களை முன்னேறச் சொல்கிறது? அதற்காக நீங்கள் செய்ய வேண்டிய ஆயத்தங்கள், மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகள் பற்றி அந்த அழைப்பாளர் என்ன கூறினார்? போன்ற கேள்விகள் அழைப்பாளரின் வருகைக்குப் பின்னால் இருக்கின்றன. ரமழானை வரவேற்று வழியனுப்பி வைப்பவர்கள் இந்தக் கேள்விகளுக்குரிய பதில்களை அறியாது ''ரமழானும் முடிந்து விட்டது. முடிந்த அவசரத்தைப் பாருங்களேன்'' என்று கூறலாகாது. அவ்வாறாயின் ரமழான் விடுக்கும் அழைப்பு எது? பதிலை அறிந்து கொள்ள நபிகளாரின் காலம் வரை சற்றே பின்னோக்கிச் செல்வோம்.

நபிகளார் உருவாக்கிய அந்த குர்ஆனிய சமூகத்திற்கு 15 வருடங்கள் செல்கின்றன. அது நுபுவத்தின் 15ஆம் வருடம். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு. பல்வேறு பயங்கரமான கட்டங்களைத் தாண்டி வெற்றிப் படிகளில் முஸ்லிம் பிக்கவில்லை. அல்லது பதினைந்து வருடங்களுக்குப் பிறகு இப்போது தான் நோன்பின் மூலம் அல்லாஹ் அச் சமூகத்திற்கு இறையச்சத்தைப் போதிக்கிறான் என்பதும் இதன் பொருளல்ல. உண்மையாதெனில், அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் அளவிலா அன்பு கொண்ட சமூகமே அது. அந்த சமூகத்திற்கு இறையச்சம், இறையன்பு போன்றவற்றைப் புதிதாகக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை.

முஸ்லிம்கள் ''பலத்திலும் நீதி, பலவீனத்திலும் நீதி'' என்ற கோட்பாட்டைக் கடைபிடிப்பவர்கள். ஆனால் அந்தக் கோட்பாட்டை நடைமுறைப் படுத்துவதில் பாரியதொரு சவாலுக்கு அவர்களும் முகம்கொடுத்தாக வேண்டும். மனிதப் பலவீனங்கள், உணர்ச்சிகள், ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புகள் என்பவையே அந்த சவால். மனிதர்கள் என்ற வகையில் முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் அனைவருக்கும் இந்த சவால் பொதுவானதே.

ஒரு சமூகம் பலவீனமாக இருக்கும் போது இந்த சவாலை எதிர்கொள்வது சுலபம். காரணம் தனது இருப்பைப் பாதுகாப்பதற்காக அச்சமூகம் தனது ஆசாபாசங்களையும், விருப்பு வெறுப்புக்களையும் விட்டுக் கொடுக்கலாம். ஆனால் பலம் பெறும்போது, ஏனைய சமூகங்களை தனது செல்வாக்கிற்கு அடிபணியவைக்கும் ஆற்றலைப் பெறுகின்றபோது தமது ஆசைகளையும் விருப்பு வெறுப்புகளையும் விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் அச்சமூகத்துக்கிருப்பதில்லை. இந்த இடத்தில்தான் ஆசைகளை அடக்கியாளும் பயிற்சி ஒரு சமூகத்திற்கு இன்றியமையாததாக மாறுகிறது.

நோன்பு ஒரு சமூகத் தேவையை

முடியும். அந்த சமூகம் பலவீனமாக இருந்த கட்டத்தைத் தாண்டி பலம்பெறும் நிலையை அடைந்தபோது, பல்வேறு ஆசைகளுக்கு அடிமையாகி, தனது நோக்கத்தை உலகில் மறந்து விடாதிருக்கும் ஓர் உன்னத பண்பாட்டுப் பயிற்சியின் தேவை அதற்கிருந்தது. அந்த காலகட்டத்தில்தான் அல்லாஹ் அச் சமூகத்துக்கு நோன்பைக் கடமையாக்குகிறான். நோன்பு அல்லாஹ்வின் விருப்பங்களுக்காக மனிதன் தனது விருப்பங்களைத் தியாகம் செய்யும் ஆன்மிகப் பண்பாட்டுப் பயிற்சியை வழங்குகிறது. இந்த உண்மையைப் புரியவைக்கிறது நோன்பின் மகத்துவத்தை உணர்த்தவந்த பின்வரும் ஹதீஸ் குத்ஸி:

''ஆதமுடைய மகன் செய்யும் ஒவ்வொரு (நற்) செயலும் அவனுக்குரியது. நோன்பைத் தவிர. அது எனக்குரியது. அதன் கூலியாக நானே இருக்கிறேன். ஏனெனில் அவன் எனக்காக தனது உணவையும், குடிப்பையும், ஆசை களையும் விட்டுவிடுகிறான்.''

நோன்பின் அழைப்பு புரிகிறதல்லவா? நோன்பு ஒரு புறத்தில் சுவனத்திற்கான அழைப்பை விடுக்கிறது. அதனை நாம் இங்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அது பற்றிய போதுமான விளக்கங்கள் பரவலாகக் கிடைப்பதன் காரணத்தால். நோன்பு மறுபுறத்தில் உலகை வழி நடத்த வேண்டிய முஸ்லிம் சமூகத்தின் பாரிய பொறுப்பையும் அந்தப் பொறுப்பை சுமந்து செயற்படுவதற்கான ஒரு முக்கிய பயிற்சியையும் பெற்றுக் கொள்ளுமாறு அழைக்கிறது. நோன்பின் அழைப்புக்கு முஸ்லிம் சமூகம் செவிசாய்க்குமா? அல்லது அதனை ஒரு விருந்தாளியாகக் கருதி வந்தவரை வழியனுப்புவது போல வழியனுப்பி வைத்துவிடுமா?

---





ஒருநாள் செல்வந்தரொருவர் சாலை வழியே சென்றபோது ஒரு யாசகன் 'சீமானே! ஏதாவது தந்து உதவுங்கள்' என்றார். செல்வந்தர் அவனை கருணையுடன் பார்த்தார். யாசகரின் கண்களில் நம்பிக்கையின் ஒளி பிறந்தது. 'செல்வச் சீமானே.! வருமானம் ஏதுமற்ற வறியவன் நான். உங்கள் செல்வத்திலிருந்து ஒரு துரும்பளவு இந்த ஏழைக்கு அளிக்கக்கூடாதா..' என்று கெஞ்சினார்.

செல்வந்தன் 'நான் உனக்கு பணம் ஏதும் தரப்போவதில்லை. ஆனால் நாம் இருவரும் சேர்ந்து ஒரு வியாபாரம் செய்வோம். எனக்கு நிறைய விளைநிலங்கள் உள்ளன. அதில் விளையும் பொருட்களை நீ விற்பனை செய்ய வேண்டும். வியாபாரத்திற்கான அத்தனை வசதிகளையும் நானே செய்துதருகிறேன். நீ விற்பனை செய்தால் மட்டும் போதும். உனக்கு எவ்வளவு இலாபம் வேண்டும்?' என்றார்.

அந்த யாசகர் 'நீங்களாக பார்த்து எது கொடுத்தாலும் போதும்' என்றார். அதற்கு செல்வந்தர் '97.5 வீதமான இலாபத்தை நீ எடுத்

# வியாபார பங்காளிகள்





துக் கொள். எனக்கு 2.5 வீதம் போதுமானது' என்றார். யாசகர் நம்ப முடியாமல் 2.5 சதவீதம் போதுமா? என்றார். செல்வந்தர் 'எனக்கு ஏராளமான செல்வங்கள் இருக்கின்றன. அதனால் 2.5 வீதம் போதுமானது. வருடக்கடைசியில் தந்தால் போதும்' என்றார்.

வியாபாரம் தொடங்கியது. யாசகர் கடுமையாக உழைத்தார். வியாபாரம் பெருகியது. யாசகர் கொஞ்சம் கொஞ்சமாக தன் வசதிகளை பெருக்கிக் கொண்டார். படிப்படியாக அவரது அந்தஸ்து உயரத் தொடங்கியது. அந்தஸ்து உயர உயர அவரது ஆடம்பரமும் பெருகியது. வருட இறுதியில் கணக்கு பார்த்தபோது 2.5 சதவீதம் என்பது, அவருக்கு பெரிய தொகையாக தெரிந்தது.

அவர் செல்வந்தரிடம் 'இந்த வியாபாரத்தை நடத்தியது நான் தானே. நீங்கள் எந்த உழைப்பும் செய்யவில்லையே. இரவும் பகலும் உழைத்தது நான் மட்டுமே. உங்களுக்கு ஏன் நான் பங்கு கொடுக்க வேண்டும்? எனக்கே இன்னும் அதிகம் தேவைப்படுகிறது. அடுத்த வருடம் பார்க்கலாம்' என்றார்.

நமது வாழ்விலும் இதுதான் நடக்கிறது. இரட்சகன் அல்லாஹ்வே எமக்கு வியாபார முயற்சிகளை ஏற்படுத்தித் தந்தான். அவனே வாழ்வையும் வாழ்நாளையும் தந்தான். பணம் சம்பாதிக்கும் திறமை, ஆற்றலையும் தந்தான். உடல் ஆரோக்கியத்தையும் குறைவின்றி தந்தான். நாம் பெற்றிருப்பது யாவும் அவன் தந்ததே. அவனால் கிடைத்ததில் அவனுடைய பங்கான 2.5 சதவீதம் என்பது மிகச்சிறிய பகுதியே.

அதை தவறாமல் கொடுக்க உறுதி கொள்வோம். தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமை. ஸகாத் அளவு குறிக்கப்பட்ட கடமை. இவ்விரண்டு கடமைகளையும் அல்லாஹ் எப்போதும் சேர்த்தே கூறுகிறான்.

தொழுகையை நிலைநாட்டுங்கள், ஸகாத்தையும் கொடுத்து விடுங்கள்.

---

# இஃதிகாபின் சட்டங்கள்

இஃதிகாப் என்ற அரபி வார்த்தைக்கு 'தங்குதல்' என்ற பொருளாகும். இஸ்லாமிய வழக்கில் பள்ளியில் நன்மையை எதிர்பார்த்துக் தங்குவதற்கு இஃதிகாஃப் என்று சொல்லப்படும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமழான் மாதத்தின் கடைசி 10 நாட்கள் இஃதிகாஃப் இருந்துள்ளார்கள். நபித்தோழர்களும் இருந்துள்ளனர்.

ரமழானில் இஃதிகாப் எதற்காக? 1000 மாதங்களை விடச் சிறந்த இரவாக இருக்கும் லைலதுல் கத்ரை அடைந்து. அதில் அதிகமதிகம் நன்மைகளைச் செய்ய வேண்டும். வேறு எண்ணங்களுக்கு இடம் கொடுத்து வணக்கங்களைக் குறைத்து விடக் கூடாது என்பதற்காகத் தான் ரமழானின் கடைசிப் பத்து நாட்கள் நபி (ஸல்) அவர்களும் நபித் தோழர்களும் இஃதிகாப் இருந்துள்ளார்கள் என்பதற்குப் புகாரியின் 813 செய்தி ஆதாரமாக உள்ளது.

இஃதிகாபின் ஆரம்பம்: இஃதிகாஃப் இருக்க நாடுபவர், 20ஆம் நாள் காலை சுப்ஹு தொழுதுவிட்டு இஃதிகாஃப் இருக்கும் இடத்திற்குச் சென்றுவிட வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்க நாடினால் பஜ்ரு தொழுகையை முடித்து விட்டு இஃதிகாப் இருக்கும் இடத்திற்குச் செல்வார்கள். (நூல்: முஸ்லிம் 2007)

ஒற்றை இரவுகளில் லைலதுல் கத்ரைத் தேடுமாறு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை நாம் முன்பே அறிந்துள்ளோம்.

எனவே பஜ்ரு தொழுதவுடன் இஃதிகாப் இருக்கத் துவங்குவார்கள் என்பது 21ஆம் நாள் பஜ்ராக இருக்க முடியாது. அப்படி இருந்தால் அந்த இரவு அவர்களுக்குத் தவறிப் போயிருக்கும். 20 ஆம் நாள் தொழுது விட்டு இஃதிகாஃப் இருப்பார்கள் என்று விளங்குவதே பொருத்தமாக இருக்கும்.

இஃதிகாபின் முடிவு நேரம்: இஃதிகாப் இருப்பவர் ரமழான் மாதமானது 29இல் முடிந்தால் அன்றைய மஃரிபில் (அதாவது ஷவ்வால் பிறை தென்பட்ட இரவில்) இல்லம் திரும்பலாம். ரமழான் மாதம் 30இல் பூர்த்தியடைந்தால் அன்றைய மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து இல்லம் திரும்பலாம்.

அபூஸயீத் (ரழி) கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்தின் நடுப் பகுதியில் உள்ள 10 நாட்களில் இஃதிகாப்



இருப்பார்கள். இருபதாம் இரவு கழிந்து மாலையாகி இருபத்தொன்றாம் இரவு துவங்கியதும் தமது இல்லம் திரும்புவார்கள். (சுருக்கம்) (நூல்: புகாரி 2018)

நபி (ஸல்) அவர்கள் நடுப் பத்தில் இஃதிகாப் இருக்கும் போது இருபதாம் இரவு கழிந்து மாலையாகி இருபத்தொன்றாம் இரவு துவங்கியதும் போவார்கள் என்ற செய்தியிலிருந்து, கடைசிப் பத்தில் இஃதிகாப் இருப்பவர்கள் 29 இரவு கழிந்து அல்லது 30 இரவு கழிந்து மாலையாகி ஷவ்வால் மாதம் துவங்கும். இரவில் வீடு திரும்பலாம் என்பதை அறியலாம்.

பெருநாள் தொழுகை முடித்து விட்டுத் தான் வீடு திரும்ப வேண்டுமென சிலர் கூறினாலும் அதற்கு நபிமொழிகளில் ஆதாரம் இல்லை.

பள்ளியில் கூடாரம் அமைக்கலாமா? நபி (ஸல்) அவர்கள் ரமழானில் கடைசிப் பத்தில் இஃதிகாப் இருப்பார்கள். நான் அவர்களுக்காக ஒரு கூடாரத்தை அமைப்பேன் என்று அன்னை ஆயிஷா (ரழி) கூறினார்கள். (சுருக்கம்) (நூல்: புகாரி 2033)

இந்த ஹதீஸின் அடிப்படையில் சிலர் கூடாரம் அமைக்கலாம் என்று கூறுகின்றனர். ஆனால் வேறு சில ஹதீஸ்களை நாம் கவனிக்கும் போது இது நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் குறிப்பானது என்பதை விளங்கலாம்.

நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்க நாடினார்கள். அவர்கள் இஃதிகாப் இருக்கும் இடத்திற்குச் சென்றபோது ஆயிஷா (ரழி) அவர்களின் கூடாரம், ஹஃப்ஸாவின் கூடாரம், ஸைனபின் கூடாரம் எனப் பல கூடாரங்களைக் கண்டார்கள். ''இதன் மூலம் நீங்கள் நன்மையைத் தான் நாடுகிறீர்களா?'' என்று கேட்டு விட்டு இஃதிகாஃப் இருக்காமல் திரும்பி விட்டார்கள். ஷவ்வால் மாதம் பத்து நாட்கள் இஃதிகாப் இருந்தார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி) நூல்: புகாரீ (2034)

''நீங்கள் நன்மைதான் நாடுகிறீர்களா?'' என்ற கேள்வியும், நபி (ஸல்) அவர்கள் தமது கூடாரத்தையே பிரித்து இஃதிகாபை விட்டதும் இவ்வாறு கூடாரங்கள் அமைப்பதில் அவர்களுக்கு இருந்த அதிருப்தியைக் காட்டுகின்றது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நபித்தோழர்களும் இஃதிகாப் இருந்துள்ளனர். இதை கவனத்தில் வைத்து மேற்கூறிய ஹதீஸை கவனியுங்கள். காலைத் தொழுகையை தொழுது விட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளியில் பார்த்த கூடாரங்களின் எண்ணிக்கை மொத்தம் நான்கு. ஒன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குரியது, இரண்டாவது அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்குரியது. மூன்றாவது அன்னை ஹஃப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்குரியது. நான்காவது அன்னை ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்குரியது.

இஃதிகாப் இருப்பதற்குக் கூடாரங்கள் அவசியம் என்றிருந்தால் நபித்தோழர்களும் கூடாரங்களை அமைத்திருக்க வேண்டும். அவ்வாறு அமைத்திருந்தால் நான்கிற்கும் மேற்பட்ட கூடாரங்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் இருந்ததோ மொத்தம் நான்கு கூடாரங்கள் மட்டுமே! எனவே நபித்தோழர்கள் கூடாரங்களை அமைக்கவில்லை என்பதையும் நபி (ஸல்) அவர்கள் நபித்தோழர்களுக்கு கட்டளையிடவில்லை என்பதையும் நாம் அறியலாம். எனவே இஃதிகாபிற்கு கூடாரங்கள் தேவையில்லை.

இஃதிகாபில் பேண வேண்டிய ஒழுங்குகள் பள்ளிவாசலில் இருக்கும் போது மனைவியுடன் இல்லறத்தில் ஈடுபடக் கூடாது. பள்ளிவாசல்களில் இஃதிகாஃப் இருக்கும் போது மனைவியருடன் கூடாதீர்கள்! இது அல்லாஹ்வின் வரம்புகள். எனவே அதை நெருங்காதீர்கள்! (தன்னை) அஞ்சுவதற்காக அல்லாஹ் தனது வசனங்களை மக்களுக்கு இவ்வாறு தெளிவுபடுத்துகிறான். (அல்குர்ஆன் 2:187)

தேவையில்லாமல் பள்ளியை விட்டு வெளியே செல்லக்கூடாது: ஆயிஷா (ரழி) கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் பள்ளியில் இஃதிகாப் இருக்கும் போது தமது தலையை வீட்டிலிருக்கும் என் பக்கம் நீட்டுவார்கள் அதை நான் வாருவேன். இஃதிகாப் இருக்கும் போது தேவைப்பட்டால் தவிர வீட்டிருக்குள் வர மாட்டார்கள். (நூல்: புகாரி 2029)

இதிலிருந்து தேவையில்லாமல் வெளியில் செல்லக் கூடாது என்பதையும் அவசியத் தேவைக்காக வெளியே செல்லலாம் என்பதை அறியலாம்.

பெண்கள் இஃதிகாப் இருக்கலாமா? பெண்கள் பள்ளிவாசலில் இஃதிகாஃப் இருக்கலாம் என்பதற்குப் பின்வரும் செய்தி ஆதாரமாக உள்ளது.

நபி (ஸல்) அவர்கள் இஃதிகாஃப் இருக்கும் போது அவர்களின் மனைவியரில் ஒருவரும் இஃதிகாஃப் இருந்துள்ளார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி), நூல்: புகாரீ 309)

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் நபிகளாரின் மனைவியைத் தவிர வேறு எந்த பெண்களும் இஃதிகாஃப் இருந்ததாக நாம் அறிந்தவரை ஹதீஸ்களில் இடம் பெறவில்லை. நபிகளாரின் மனைவிகள் இஃதிகாஃப் இருந்ததிலிருந்து கூடுதல் பட்சமாக பின்வரும் சட்டத்தை நாம் எடுக்கலாம்.

பள்ளிவாசலில் பெண்கள் இஃதிகாஃப் இருக்க வசதிகள் இருக்குமானால் கணவனுடன் அவர்கள் இஃதிகாஃப் இருக்கலாம். ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் நபியவர்களுடன் தான் அவர்களது மனைவிமார்கள் இஃதிகாஃப் இருந்துள்ளார்கள்.

பெண்கள் இஃதிகாஃப் தொடர்பாக அறிஞர்களிடையே உள்ள கருத்துக்களில் மேலே நாம் சொன்ன கருத்தே ஹதீஸுக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.



# தண்ணீர் கேன்கள் ஆரோக்கியத்தை பாதிக்குமா?

இன்றைக்கு தண்ணீருக்காக நாம் படும் கஷ்டம் சொல்லி இயலாது. நமது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் அளவு ஆறுகளில் நீர்வரத்து இல்லை. ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள் அனைத்தும் மாசுபட்டு, நச்சுகள் கலந்து விட்டன. மழை பொய்த்துப்போனதாலும், மக்களின் தவறான நடவடிக்கைகளாலும் நிலத்தடி நீரின் அளவும் குறைந்து வருகிறது. நாளொன்றுக்கு பல லீற்றர் கேன் தண்ணீர் விற்கப்படுகிறது. ஆனால் கேன் தண்ணீர் உண்மையிலேயே தரமானதா?

தண்ணீர் கேன்களில்) தரச்சான்றிதழ் முத்திரை இல்லாமல் யாரும் குடிதண்ணீர் விற்கக்கூடாது. ஆனால் பலர் இந்த முத்திரைகளை நிரந்தரமாகப் போட்டுக் கொண்டு ஏமாற்றி வருகிறார்கள். எனவே இதுவிடயத்தில், பொதுமக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். அதேபோல் ஐ.எஸ்.ஐ தரச்சான்று மட்டும் போதும் என்று சிலர் நினைக்கிறார்கள். எனவே தண்ணீர் கேனில் இந்த இரண்டு முத்திரைகளும் கட்டாயம் இருக்க வேண்டும். இருக்கிறதா என்பதைப் பார்த்துதான் நாம் வாங்கவேண்டும். கேன் தண்ணீர் இவற்றை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தண்ணீர் பாட்டில்களையும், தண்ணீர் கேன்களையும் தவறானமுறையில் மறுசுழற்சி செய்கின்றனர். யார் வேண்டுமானாலும் எந்த நீரை வேண்டுமானாலும் அடைத்து விற்றுவிட முடியும். தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும் இந்தச் சூழலில் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வு இல்லாத பொது மக்களும் தண்ணீர் கிடைத்தால் போதும் என்ற மனநிலையில் இருக்கிறார்கள்.

தண்ணீர் கேன்கள் வளையாமல் இருக்கவும், எளிதில் உடையாமல் இருக்கவும் பல்வேறு வேதிப்பொருட்கள் சேர்க்கப் படுகின்றன. அதேபோல் மறுசுழற்சி செய்யப்படும் கேன்கள் சரியாக சுத்தம் செய்யப்படுவது இடையாது. அந்த கேன்களில் நீரை நிரப்புவதற்கு இயந்திரங்களும் இடையாது. மனிதர்கள்தான் நிரப்புகிறார்கள். அப்போது, சுகாதாரமற்ற முறையில் தண்ணீர் நிரப்பப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

முதலில் நாம் வாங்கும் குடிநீருக்கான பில்லை கேட்டு வாங்க வேண்டும். இப்போது பெரும்பாலானோர் இணையதளத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அதற்கு இணையதளத்துக்குச் சென்று நாம் வாங்கும் குடிநீர் நிறுவனம் அங்கீகரிக்கப் பட்டதுதானா என்று பார்க்க வேண்டும். ISI, FSSAI முத்திரைகள் இருக்கிறதா எனவும் பார்க்கவேண்டும். எவ்வளவோ விஷயத்துக்குத் தேவையே இல்லாமல் போனில் பேசும் நாம் குடிநீர் நிறுவனத்தின் கஸ்டமர் கேயரை அழைத்துப் பேச வேண்டும். தரமில்லாத பொருட்களை மாற்றித்தரச் சொல்லலாம். குடிநீரை நாமே நீர் பகுப்பாய்வு அலுவலகங்களில் கொடுத்து ஆய்வு செய்யச் சொல்லலாம்.

நாம் வாங்கும் கேன் தண்ணீர் தரமானதுதானா? என்று கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கான குறைந்தபட்ச முயற்சியையாவது எடுக்க வேண்டும். இல்லையேல் நாம் குடிக்கும் நீர் நம் உயிருக்கு உலை வைக்கும்.

# விற்றமின் டி குறைபாடு ஆபத்து?

விற்றமின் டி குறைபாடு என்பது வயதானவர்களுக்கு வருவது இயல்பாகும். தற்போது இளம் வயதினரிடையேயும் இந்த குறைபாடு அதிக அளவில் காணப்படுகின்றது.

உடலில் விற்றமின் டி குறைந்தால் ஆபத்து

விற்றமின்கள் இரண்டு வகைப் படும். அவை கொழுப்பில் கரைபவை, தண்ணீரில் கரைபவை. கொழுப்பில் கரையும் விற்றமின்கள் ஏ,டி,ஈ,கே ஆகும். இதேபோல் விற்றமின்கள் பி1,பி6,பி7,பி12 ஆகியவை தண்ணீரில் கரைபவை. எலும்புகள் மற்றும் தசைகள் வலுவாக இருக்க விற்றமின் டி அவசியம். வளர்சிதை மாற்றத்துக்கு இது மிகவும் முக்கியம்.

போதுமான சூரிய ஒளி பட்டால் உடலில் கொலஸ்ட்ரோலில் இருந்து விற்றமின் டி கிடைக்கும். விற்றமின் டி குறைபாடு என்பது வயதானவர்களுக்கு வருவது இயல்பாகும். தற்போது இளம் வயதினரிடையேயும் இந்த குறைபாடு அதிக அளவில்



காணப்படுகின்றது.

ஒவ்வொருவருக்கும் வாரத்திற்கு இரண்டு நாட்கள் சுமார் 45 நிமிடம் சூரிய ஒளி உடலில் படுவது அவசியமாகும். இதன் மூலம் உடலுக்கு தேவையான விற்றமின் டி கிடைத்துவிடும். 1. சிறுவர்கள் தற்போது திறந்த வெளியில் விளையாடுவது கிடையாது. 2. சூரிய ஒளியில் இருந்து பாதுகாக்க சன்ஸ்கிரீன் லோஷனை பயன்படுத்துகிறோம். 3. பணி முடிந்தபின்னர் வீட்டிற்கு நடந்து வருவதை தவிர்க்கிறோம்.

**குறைபாடு அறிகுறிகள் :**

மனஅழுத்தம்
உடல் பருமன் முதுகுவலி
மூச்சிரைப்பு
உயர் இரத்த அழுத்தம்
முடி உதிர்தல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன.
விற்றமின் டி உணவு பொருட்கள்
மீன் வகைகள்
இறைச்சி
பால் மற்றும் பால் பொருட்கள்
தானிய வகைகள்.
முட்டையின் மஞ்சள் கரு
போன்றவை உண்ணலாம்.

# நலம் வாழ

செ.தர்ஷிகா

# ஆண்களுக்கு பலனைத்தரும் ஓரிதழ் தாமரை



ஓரிதழ் தாமரை இது தாமரையில் ஒரு வகையா? அப்படியானால் ஏன் தாமரையைப்போல தண்ணீரில் வளரவில்லை என்பார்கள். இது நிலத்தில் வளரக்கூடிய சிறு செடியினத்தைச் சேர்ந்த இதன் பூ சிவந்த நிறமும் நடுவில் நாமம் போன்றும் காணப்படும். இதன் காய் ஒற்றைக்கல் மூக்குத்தி போலிருக்கும். வயல்வெளி மற்றும் சதுப்பு நிலங்களில் வளரக்கூடிய இந்த மூலிகைக்கு சூரத்தின புருஷ்" என்ற வேறு பெயரும் உள்ளது. ஓரிதழ் தாமரையின் இலை, தண்டு, பூ, வேர், காய் மட்டுமன்றி முழுச் செடியுமே மருத்துவக்குணம் வாய்ந்தது.

**ஓரிதழ் தாமரை**

★ ஓரிதழ்தாமரையின் இலையை அதிகாலையில் மென்று சாப்பிட்டு, பால் குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். இதேபோல், ஓரிதழ் தாமரையின் சமூலத்தையும் (வேர் முதல் பூ வரை) உண்டு வரலாம்.

★ ஏதாவது நோய்களால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து விடுபட்டவர்கள், உடலைத் தேற்ற ஓரிதழ்தாமரை சமூலத்தை உண்ப தன்மூலம் நிவாரணம் பெறலாம். இதே சமூலத்தை கஷாயம் செய்து குடித்து வந்தால் விஷக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறலாம்.

★ஆஸ்துமா நோயாளிகளுக்கும் இந்த கஷாயம் நல்லதொரு மருந்தாகும். உடல் எடையை குறைக்க சிகிச்சை எடுப்பவர்கள் இதே கஷாயத்தை அருந்தி கைமேல் பலன் பெற லாம்.


★ உணவு, சூழல், ... காரணமாக சில இளை... யதிலேயே முதியவர்க... டுவார்கள். அப்படிப்ப... ஓரிதழ் தாமரை, கீழா... களைச் சாப்பிட்டு வந்தால் பலன் பெறலாம்.

★ பாதுகாப்பற்ற உறவு கொள்ளும் ஆண்கள் மற்றும் பெண்களை பாடாய்ப்படுத்தும் நோய்களில் ஒன்று மேகவெட்டை (பாலியல் நோய்). பிறப்புறுப்பு மற்றும் ஆசனவாய்ப் பகுதிகளில் வரக்கூடிய இந்த மேகவெட்டை நோய்க்கு ஓரிதழ்தாமரை சமூலம் பலன் தரும்.

★ ஆண்மைக்குறைபாடு, குழந்தையின்மை பிரச்சினை, தாம்பத்யத்தில் ஈடுபட இயலாமை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு இந்த ஓரிதழ்தாமரை பலனளிக்கும்.

★ இலை, தண்டு, வேர், பூ, காய் என ஓரிதழ் தாமரையின் முழு சமூலத்தை நிழலில் உலர்த்திப் பொடி செய்து இரவு தூங்கச்செல்வதற்குமுன் பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இதைத் தொடர்ந்து ஒரு கிழமை செய்து வந்தால் உடனடி பலன் கிடைக்கும்.

இதே சமூலத்தை (வேர் முதல் பூ வரை) அரைத்து சுண்டைக்காய் அளவு எடுத்து பசும்பாலில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் மூன்று நாட்கள் சாப்பிட்டு வந்தால் ஆண்களுக்கு ஏற்படக்கூடிய வெள்ளை ஒழுக்கு, அடி வயிறு வலி போன்றவை சரியாகும்.



# இனிக்கும் பாகற்காய்

பாகற்காய் கேட்டவுடன் வாய் முழுக்க அதன் கசப்பு படர்ந்துவிட்டதுபோல உணர்வார்கள். ஆனால், பாகற்காய் அந்த அளவுக்கு வெறுத்து ஒதுக்கவேண்டிய காய் அல்ல. நமக்கு நன்மை தரும் பல அம்சங்கள் இதில் உள்ளன.

சபுரோக்கோலியில் இருப்பதைவிட இரண்டு மடங்கு பீட்டா கரோட்டின் இதில் உண்டு. இந்த பீட்டா கரோட்டின்தான், நம் உடலுக்குள் விற்றமின் ஏ-வாக மாற்றப்பட்டு சேகரமாகும். இது நமது கண், தோல் போன்றவற்றுக்கு நல்லது.

இது நமது எலும்பு, பல் வளர்ச்சிக்கு உதவும். வாழைப்பழத்தில் உள்ளதைவிட இரண்டு மடங்கு பொட்டாசியம் இருக்கிறது. தசை வலிமை, நரம்பு மண்டலச் செயல்பாடு, இதய நலன் போன்றவற்றுக்குப் பொட்டாசியம் உதவும்.

**இன்சுலின் சுரப்பு மேம்படும்!**

இதில் சாரன்டின் (Charantin) என்ற வேதிப்பொருள் உள்ளது. இரத்தத்தில் உள்ள அதிக சர்க்கரையை இது குறைக்கும். இதேபோல் பொலிபெப்டைடு பி (Polypeptide P) என்ற இன்சுலின் பாகற்காயில் உள்ளது. இது சர்க்கரைநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்சுலின் மேம்பட உதவும்.

பாகற்காயை ஜூஸ் ஆக்கிக் குடிப்பது குடலில் உருவாகும் புழுக்கள், ஒட்டுண்ணிகளைக் கொல்ல உதவும். ஒவ்வாமை, வீக்கம், கட்டிகளையும் பாகற்காய் போக்கும்.

விதைகளிலும் உண்டு பயன்கள்!

இதன் விதைகள் இதய நோய்களிலிருந்து நம்மைக் காக்கும். தேவையற்ற கொழுப்புகளை எரித்து, இதய தமனி அடைப்பு ஏற்படுவதில் இருந்து காப்பாற்றும். புற்றுநோய், லூக்கீமியா, ரத்தசோகை போன்றவை வராமல் தடுக்கும் ஆற்றலும் இதற்கு உண்டு.

**தோல் நோய்களுக்கு மருந்து!**

இதன் சாற்றை எலுமிச்சைச் சாற்றில் கலந்து காலை வெறும் வயிற்றில் ஆறு மாத காலம் குடித்துவர, முகப்பரு பிரச்னை நீங்கும். தோல் பிரச்சினைகளான சிரங்கு, அரிப்பு, சொரியாசிஸ், படர்தாமரை, அலர்ஜி போன்றவற்றுக்குத் தீர்வு தரும்.

**எடை குறைப்புக்கு உதவும்!**

பாகற்காயில் 80- 85% தண்ணீர் உள்ளது. இதிலிருந்து கிடைக்கும் கலோரியும் குறைவுதான். தண்ணீர் நமது பசியைக் போக்கும் என்பது நமக்குத் தெரியும். பாகற்காயைச் சாப்பிடுவதால் பசி கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். இதனால் எடை குறையும்.

**ஓர் எச்சரிக்கை!**

அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது பாகற்காயைப் பொறுத்தவரை உண்மை. இதையும் பாகற்காயைக் குறைந்த அளவே சாப்பிட வேண்டும். இல்லையென்றால், அடிவயிற்றுவலி, வயிற்றுப்போக்கு போன்றவை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. சர்க்கரை நோயாளிகள் இதைத் தொடர்ந்து சாப்பிட்டால், அவர்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகளில் மாற்றம் செய்ய வேண்டி வரும். மருத்துவரிடம் ஆலோசனை பெற்ற பிறகுதான் பாகற்காயை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். குறைப்பிரசவம் ஏற்பட வாய்ப்புண்டு என்பதால், கர்ப்பிணிப் பெண்கள் பாகற்காயைத் தவிர்ப்பது நல்லது.

# கருவாடு; எந்த உணவுடன் உண்ணலாம்!



அசைவ உணவுகளில் அதிக கொழுப்பு சத்து இல்லாத உணவு மீன் மற்றும் கருவாடு தான். ஆனால், கருவாட்டை எந்தெந்த உணவுகளுடன் சேர்த்து சாப்பிடக் கூடாது, யாரெல்லாம் கருவாடு சாப்பிடக்கூடாது என்று உங்களுக்குத் தெரியுமா?

கருவாடு மட்டுமின்றி மீன், நண்டு போன்ற உணவுகள் சாப்பிடும் போதும், மோர், தயிர், கீரை போன்ற உணவுகள் சேர்த்துக்கொள்ள கூடாது. இது உணவு விஷமாக காரணமாகலாம்.

மிளகு, பூண்டு, சீரகம், திப்பிலி போன்றவை சேர்த்து ரசம் வைத்து கருவாட்டுடன் சேர்த்து சாப்பிடுவது ஆரோக்கியமானது. மேலும் இந்த ரசத்தை தனியாக குடித்து வந்தால் அஜீரணம், வாந்தி, பேதி ஆகாமல் தடுக்கும்.

தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிக்கும் போது கருவாடு, மீன், நண்டு, இறால், தயிர், மோர் போன்ற உணவுகள் சாப்பிட கூடாது.சைனஸ், மூக்கடைப்பு, சளி, இருமல், தும்மை, காய்ச்சல், ஆஸ்துமா போன்ற கோளாறு உள்ளவர்கள் எண்ணெய் தேய்த்து குளிக்கவே கூடாது. இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் உள்ளவர்கள் உப்பு அதிகமான உணவுகள் சேர்த்துக் கொள்ள கூடாது. ஆகையால் அவர்கள் கருவாடு அதிகம் உண்ணுதல் கூடாது. கருவாடு மட்டுமின்றி அப்பளம் மற்றும் ஊறுகாயும் கூட இவர்களுக்கு தடை செய்யப்பட்ட உணவுகள் தான்.

மேலும், மீன், கருவாடு சாப்பிட்ட பிறகு பால், தயிர் சாப்பிடக்கூடாது. மீறி உண்டால் ''வெண் மேகம்'' போன்ற நோய்கள் வர வாய்ப்புள்ளது.

# கண்ணாலும் காதாலும்...



உரக்கப் படிப்பவர்கள், உதடசைத்துப் படிப்பவர்கள் படிப்பதை தன் குரல் ஒலி மூலம் காதால் கேட்டு மூளையில் பதிய வைக்கும் ஆற்றலையே அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

பொதுவாக, ஒருவரின் பேச்சு நமக்கு புரியவேண்டுமென்றால் பேசுபவர்கள் விரைந்து பேசக்கூடாது. ஒரு வார்த்தையை காதில் கேட்டு அறியும் முன்னரே அடுத்த வார்த்தை காதில் விழுந்தால் குழப்பம் ஏற்படும். எனவே, இடைவெளி தேவை.

ஒருவர் காதால் கேட்டு அறியவேண்டுமென்றால் ஒரு நிமிடத்திற்கு 250 வார்த்தைகளுக்கு மேல் படிக்க முடியாது. கண்களால் பார்த்து, ஒரே கண்பதிவில் 5 வார்த்தைகளுக்கு மேல் பதிய வைக்கும் ஆற்றலை பெற்றவர்களால் ஒரு நிமிடத்திற்கு 700 வார்த்தைகளுக்கு மேல் படிக்க முடியும்.

எனவே, வாய்விட்டுப் படிக்கிறவர்களால் விரைந்து படிக்க முடியாமல் போவதோடு ஆற்றல் இழப்பிற்கும் ஆளாகிறார்கள். எனவே, விரைந்து படிப்பவர்கள் மௌனமாக கண்களால் பார்த்து , கண்களை அதிகமாக இடது, வலது பக்கங்களில் நகர்த்தாமல், மேலிருந்து கீழாக நகர்த்திப் படிக்கக் கற்றுக் கொண்டால் நீங்கள் விரைந்து படிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள்.




# ஹிலாரி முனை அழிந்துவிட்டதா?

உலகின் மிக உயரமான சிகரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் இருந்த ஹிலாரி முனை அழிந்துவிட்டதாக பிரித்தானியா மலையேற்ற வீரர் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவை சேர்ந்த மலையேற்ற வீரர் டிம் மோஸ்டைல் என்பவரே இதை உறுதி செய்துள்ளார்.

1953ஆம் ஆண்டு, முதன்முறையாக நேபாளத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய சர் எட்மன்ட் ஹிலாரி என்பவரின் நினைவாக எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் உள்ள பாறைகள் நிறைந்த பகுதிக்கு 'ஹிலாரி முனை' என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்த நிலையில், டிம் மோஸ்டைல் தனது சமூக வலைதள பக்கங்களில் வெளியிட்டுள்ள பதிவில், ஹிலாரி முனை சரிந்துவிட்டதாக தெரிவித்துள்ள டிம், 2015 ஆம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம்தான் இதற்கு முக்கிய காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாறை நிறைந்த ஹிலாரி முனை, மலையேறுபவர்களுக்கு ஒரு அரண்போலத் திகழ்ந்தது. தற்போது, இந்தப் பகுதி சரிந்துவிட்டதால், இனி வரும் காலங்களில் மலை ஏறுபவர்கள், பல ஆபத்துகளைச் சந்திக்கவேண்டியிருக்கும் என வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.



# அரசசேவையில் அருகிவரும் மனிதத்தன்மை நிலைமையை மாற்ற விரைவில் தேசிய கொள்கை

## அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு



(கஹட்டோவிட்ட றிஹ்மி)

இன்று எமது அரச சேவையில் மனிதத் தன்மை அருகியுள்ளது. கனிசமான அரச ஊழியர்கள் தமது உடல் பலம் மூலம் தொழில் உரிமைகளை வென்றெடுப்ப தற்குப் பழக்கப்பட்டுள்ளனர். இதற்கு சிறந்த உதாரணம் எமது அருகிலேயே உள்ளது. வைத்தியர்கள் நோயாளிகளான எம்மை பாவித்து அவர்களது கோரிக் கைகளை வென்றெடுக்கின்றனர். அதே போன்று நீர் வழங்கல் சபையின் ஊழியர் கள் மக்களுக்கு வழங்கும் நீரைப்பாவித்து தமது உரிமைகளை வென்றெடுக்க முய லும் அதே வேளை, மின்சார சபையின் ஊழியர்கள் மின்சார வழங்கலைப் பாவித்து அதனை சாதிக்க முனைகின்றனர். இந்த நிலைமையை மாற்றுவதற்கு நாங்கள் தேசிய கொள்கை ஒன்றைக் கொண்டுவர வுள்ளோம் என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை நிர்வாக உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

இன்று அரச சேவையில் பல முரண்பா டுகள் தோன்றியுள்ளன. நீர் வழங்கல் சபை, மின்சார சபை என்பவற்றின் பொறி யியலாளர்களது மாதாந்த சம்பளம் 2 அல்லது 3 இலட்சங்களாக உள்ள அதேவே ளை, அரச சேவையில் உள்ள பொறியிய லாளர் சேவையில் உள்ள ஒருவர் பெறுவது 70 000, 80 000 அளவான மாதாந்த சம்பளமாகும். இதில் பாரிய முரண்பாடு உள்ளது. வரலாற்றில் அதிக சம்பள உயர்வை நாம் வழங்கியது அவர்களது வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்காக வாகும். இதனை மாத்திரம் அதிகரிப்பதற்கு நாம் 200 பில்லியன் அளவான நிதியை ஒதுக்கினோம். இது தேசிய வருமானத்தில் 40 வீதமாகும். இவற்றை செய்த போதும் சில தொழிற்சங்கங்கள் அரச விரோத செயற்பாடுகளைச் செய்வது மிகவும் கவ லைக்குரியது.- என்றார்.

அமைச்சர் என்ற வகையில் உங்களுக்கு இச்சேவையில் உள்ள பிரச்சினைகள் குறித்து மிகவும் அறிவேன். விசேடமாக தொழில் உரிமைகள் கிடைக்காமை, தொழில் கௌரவம் பாதிக்கப்படல் போன்றவை. இதற்காக இந்த விடயம் தொடர்பான அமைச்சர் என்ற வகையில் நான் கபினட் பத்திரம் சமர்ப்பித்துள்ளேன். ஆயினும் இது எனது அமைச்சு மாத்திரம் செய்யக்கூடிய ஒன்றல்ல. இதற்காக நிதி அமைச்சின் அனுமதி அவசியம். ஆயினும் துரதிஷ்டமாக நான் சமர்ப்பித்த பத்திரம் நிதியமைச்சின் அனுமதியைப் பெறுவதில் சில சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. எவ் வாறாயினும் உங்களுக்குக் கிடைக்க வேண் டிய உரிமைகளுக்காக நான் தொடர்ந்தும் முயற்சிப்பேன்.

தற்போது கதை ஒன்று உலாவருகிறது, பிரதேச சபைகளின் செயலாளர்களாக கடமையாற்றுபவர்களுக்கு வேறு சேவை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக. நான் செ ால்கிறேன், அவ்வாறான ஒன்று உருவாகு வதற்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் என்றும் துணைபோக மாட்டோம். அது போன்று நாம் அரச ஊழியர்களுக்காக எவ்வளவு தூரம் சிந்திக்கிறோம் என்பதை அண்மையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை யில் கண்டிருக்கலாம்.

அந்த நிலைமையில் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கான விடுமுறைகளை அனுமதிப்பதற்கான சுற்றுநிருபத்தை நாம் அக்கறையுடன் எமது அமைச்சு மூலம் வெளியிட்டோம். அத்துடன் அனர்த்தத் தில் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்காக 3 மாத கடனை வழங்குவதற்கான கோரிக் கையினை அரச ஊழியர் சங்கம் விடுத்தது. ஆயினும் நான் நிதியமைச்சின் அனுமதிக்கு அனுப்பியுள்ளேன் 6 மாதங்களுக்கான வட்டியில்லாத கடன் வழங்கும் கோரிக் கையினை அதற்கு நிதியமைச்சின் அனு மதி கிடைக்கும் என்று நான் நம்புகிறேன் என்றார்.

இச்சந்தர்ப்பத்தில் நிர்வாக உத்தியோகத் தர் சங்கத்தின் தலைவர் டி.எம்.ஏ.திசநா யக்க அரச ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் பாடுபடும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிற்கு விசேட நன்றியினைத் தெரிவித்தார். இந்த மாநாட்டிற்கு அகில இலங்கை நிர்வாக உத் தியோகத்தர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



ஐந்தாம் தர புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச வகுப்பு நடத்துவதற்கு கிண் ணியா கல்வி, சமூக அபிவிருத்தி ஒன்றியத்திற்கு (கெஸ்டா) திருமலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் 45 ஆயிரம் ரூபாய் காசோலையை அவ் அமைப்பின் உப தலைவரும்,கிண்ணியா பிரதேச செயலக உள வளத்துணை அபிவிருத்தி உத்தியோகத்த ருமான ஏ. எச்.எம்.ரியாத்திடம் வழங்கி வைப்பதை படத்தில் காண்க.
(படம்-கிண்ணியா நிருபர்)

# தபால் ஊழியர் பணிபகிஷ்கரிப்புக்கு அரசியல் சாயம் பூசவேண்டாம்

## அஞ்சல் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயலாளர் பைசர்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்,ஏ.எல்.எம். சலீம்)

தபால் சேவை ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு அரசியல் சாயம் பூச வேண் டாம் என அஞ்சல் உத்தியோகத்தர்கள் ச ங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம். பைஸர் தெரிவித்தார்.

தபால் சேவை ஊழியர்கள் மேற்கொண்ட அடையாள வேலை நிறுத்தம் இரண்டாவது நாளாகவும் நேற்று இடம்பெற்றது. இந்த வேலை நிறுத்தம் தொடர்பாக விளக்கம ளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கல்முனை அஞ்சல் உத்தியோகத்தர்கள் ச ங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடை பெற்றது. இங்கு தலைமைத் தாங்கி உரை யாற்றும் போதே சங்கத்தின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும் போது,

நாளைய தினம் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் விண்ணப்ப இறுதித் திகதி யாகும். எனினும் எந்த மாணவர்களுக்கும் பாதிப்பு இல்லாத வண்ணம் முழு சேவை யையும் வழங்க காத்திருக்கின்றோம். நாம் சம்பளத்தை கூட்டித்தரக் கோரி வேலை நிறுத்தம் செய்ய வில்லை. எமது வேலை நிறுத்தத்திற்கு அரசியல் சாயம்பூச சிலர் நினைக்கின்றனர். அவ்வாறு எந்த அரசியல் பின்னணியும் இல்லை.




நுவரெலியா, கண்டி, காலி ஆகிய தபால் நிலையங்கள் சுற்றுலாத்துறைக்காக உள் வாங்கப்படுவதை கண்டித்தும் கொழும்பு பிரதான தபால் நிலையக் கட்டடத்தில் பிரதான தபால் அலுவலகத்தை அமைக் காமை, சேவை தொடர்பான யாப்பினை மறுசீரமைத்து நடைமுறைப்படுத்தாமை என பல முகாமைத்துவ பிரச்சினைகளுக்கு தீர்வு தரக் கோரி இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளோம்.

இந்த வேலை நிறுத்தம் குறித்த பிரச்சி னைகளுக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் வேலை நிறுத்தம் தொடரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். 25இற்கு மேற்பட்ட தபால் சேவை தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றன.

பொதுமக்களை பாதிப்பதற்காக வேலை நிறுத்தம் செய்யவில்லை நியாயபூர்வமான கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும் என்றார். இதில் சங்கத்தின் தலைவர் டீ.எச்.ஜெயந்த, பிரதி பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ. முபாறக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தவ்ஹீத் ஜமாஅத்தினருக்கு இரத்ததானத்திற்கான விருது





நாடு முழுவதும் ஏகத்துவப் பிரசாரத் தையும், சமுதாயப் பணிகளையும் ஒரு சேர முன்னெடுத்து வரும் ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத் கடந்த 04 வருடங்களாக இரத்த தானத்தில் முதலிடத்திற்கான விருதை பெற் றுக் கொண்டது.

உலக இரத்தக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு இரத்த தானத்திற்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது.

நாடு முழுவதும் சுமார் 90 கிளைகளை கொண்டு இயங்கி வரும் முஸ்லிம் சமுதாய பேரியக்கமான ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத் இவ்வருடமும் இரத்ததான விருதை பெற் றுக் கொண்டது.





ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரக கெட்டிய பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் அமைச்சர் சஜித் பிரேமதாசாவினால் வழங்கி வைக்கப்பட் டது. ஒவ்வொரு பொதியும் ரூபா 3500 பெறுமதி வாய்ந்தது இந் நிகழ்வில் அமைச் சரின் பாரியாரும் கலந்து கொண்டார்.
(அஷ்ரப்.ஏ .சமத்)

# ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி



(நிகாவெட்டிய நிருபர்)

கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல் விப் பணியகம், பினான் சர்வ தேச நிறுவனம் ஊடாக யுனிசெப் நிறுவன நிதியு தவியில் செயற் படுத்திவரும் கிழக்கு மாகாண பாலர் பாடச ாலை நிலையின் ஆசிரியர்க ளுக்கும் சமூக இணக்கப்பாடுக ளுடன் தொடர்பு டைய கற்பித்தல் உபகரணங்க ளைத் தாமாகத் தயாரித்து அதனைப் பாலர் கற்பித்தலின் போது கையாளும் பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றது. இதன் அடிப்படையில் அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலை கல்முனை, சம்மாந்துறை வலய ஆசிரியர்கள் 110 பேருக்கான பயிற்சி நெறி களும், அதற்கான உபகரணப் பொதிகளும் வழங்கும் நிகழ்வு அண்மையில் அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத்தின் செயலாற்றுப் பணிப்பாளர் எம்.எஸ்.சுபைபிர் தலைமையில் சாய்ந் தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதி கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத்தின் தவிசாளர் பொன்.செல்வநா யகம், மற்றும் அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத்தின் செய லாற்றுப் பணிப்பாளர் எம்.எஸ்.சுபைபிர், பினான்

சர்வதேச நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட செயற்திட்ட இணைப்பாளர் எஸ்.இரவிச்சந்திரன், அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத் தின் வெளிக்கள உத்தியோகத்தர்களான எஸ்.எம்.றிசான், ஐ.எல்.எம்.அனீஸ் ஆகி யோர் ஆசிரியர்களுக்கான பொதிகளை வழங்கி வைத்தனர்.

# மாணவி துஷ்பிரயோகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தரத் தில் கல்வி கற்கும் மோனிங்டன் தோட்ட மாணவி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சி செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க கோரியும் நேற்று டய கம நகரில் மாணவர்கள் மற்றும் பெற்றோர் கள் இணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது அதே பிரதேசத்தைச் சேர்ந்த திருமண மான நபர் ஒருவரால் பாலியல் வன்பு ணர்வுக்குட்படுத்த முயற்சி செய்துள்ளார். அதனை தொடர்ந்து சந்தேக நபர் அவ்விடத் தினை விட்டு ஓடியதாக டயகம பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்ததையடுத்து சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது டயகம நகரில் உள்ள 59 கடைகளும் சுமார் ஒரு மணித்தியாலம் மூடப்பட்டிருந்தது.

# அளுத்கம கறுப்பு ஜீலை..

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மிகவும் கஷ்டத்துடன் வாழ்கிறேன்

அளுத்கம கலவரத்தில் காலை இழந்த அஸ்ஹத்

எமது பகுதியில் இடம்பெற்ற கலவரம் நடைபெற்று 3 வருடங்கள் கழிந்தாலும், எனது வாழ்க்கையில் நான் இதுவரை பல்வேறுபட்ட இன்னல்களுக்கும், கஷ்டங்க ளுக்கும் முகங்கொடுத்து வருகிறேன்.21 வய தான நான் தற்போது முச்சக்கரவண்டி சாரதி யாகவும், சாச்சாவின் கடையிலும் வேலை செய்கிறேன். நான் இக்கலவரத்தால் காலை இழந்ததையடுத்து அதிர்ச்சிக்குள்ளான எனது தகப்பனார் மற்றும் தாயார் தற்போது நோய் வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றது டன், இருவருக்கு இருதய சத்திரசிகிச்சையும் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

எனக்கு உதவி மற்றும் தொழில் வாய்ப்பு களைப் பெற்று தருவதாகக் வாக்குறுதிய ளித்த பலரை இன்றுவரை காணமுடியாமல் உள்ளது.எனது குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு எனது சகோதரன் கடந்த வருடம் சவூதிக்குச் சென் றார்.அவரின் உதவியால் தான் தற்போது எனது குடும்பம் வாழ்ந்து வருகின்றது. குறிப் பாக எனக்கு செயற்கையான காலை வாங் கித்தருவதாகக் கூறிய அளுத்கம அபிவிருத்தி நிதியம் இதுவரை அதைப் பெற்றுதராமல் லை.மாறாக தனவந்தர் ஒருவரின் உதவியு டன் 2 இலட்சம் பெறுமதியான செயற்கைக் காலை வாங்க முடிந்தது.எனக்கு ஓடித் திரிந்து தொழில் செய்ய முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். எனவே சுயதொ ழில் ஒன்றை செய்வதற்கு உதவி செய்தால் நன்றாக இருக்கும். அதிலும் குறிப்பாக தற்போதுள்ள செயற்கை கால் குறைவான தரத்தைக் கொண்டதால் எனது கால்களுக்கு சிறுசிறு காயங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் அதை பல தடவைகள் திருத்த வேண்டி ஏற்பட்டது. ஆனால் தரமான காலொன்றை வாங்க சுமார் 6 இலட்சம் ருபா தேவைப்படுகின்றது.அவ்வாறு அதை வாங்கித் தருவதற்கு எவராது முன்வந்தால் நிச்சயம் எனது வாழ்க்கையை கொண்டு செல்ல இலகுவாக இருக்கும். குறிப்பாக இக்கலவரத்தின் பிறகு எனக்கு சாதாரண ஓர் இளைஞனாக பொது இடங்களில் நடமாட முடியாமல் உள்ளது.இப்பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் என்னைக் கண்டவுடன் கல வரத்தில் எங்களுக்கு அடித்தவன் நான்தான் என்று சொல்லி என்னை இழிவுபடுத்திப் பேசுகின்றார்கள். ஆனால் தற்போது அவ் வாறான நிலைமைகள் இடம்பெறுவது குறைவானாலும், இதற்குப் பிறகும் நாட்டில் இதேபோன்ற அசம்பாவிதங்கள் நடந்தால் அதனால் அதிகம் பாதிக்கப்படுபவன் நான் என்பது உறுதி. எனவே அல்லாஹ் என்னைப் பொறுத்திக்கொண்டாலும்,சமூகத்தின் மற்ற மதத்தவர்களுக்கு மத்தியில் மிகப் பெரிய மனஅழுத்தங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றேன்.



# இலங்கை ஹஜ் பயண ஏற்பாடுகளும்
# ஹஜ் கட்டணமும் ஓர் ஆய்வு

**அபூ அய்தா**

இலங்கை ஹஜ் கட்டணம் பற்றிய பார்வைக்குள் செல்வதற்கு முன், ஹஜ் என்ற இஸ்லாமிய கடமை என்பது ஒருவரின் மீது எந்த அடிப்படையில் விதியாகின்றது என்பதை அறிந்து கொள்ளுதல் சாலச்சிறந்தது. இவ்வாறு அறிந்து கொள்வதன் மூலம் , தான் சம்பாதித்த ஆகுமான பொருளாதாரத்தை ஆகுமான முறையில் செலவளித்தல் என்ற கோட்பாட்டு விளக்கம் பூரணப்படும். ஹஜ் என்பது பொருளாதாரம், உடல் ஆரோக்கியமிக்கோருக்கான கடமை. இதில் பொருளாதார வசதி படைத்தோர் என வகைப்படுத்தப்படுபவர்கள் யார்? என்பது மிக முக்கியம்.

உதாரணமாக மாதாந்த சம்பளத்திற்கு ஸகாத் கடமையாகும் ஒருவர் தனது வருமானத்தில் அடிப்படை மாத செலவுகள் போக எஞ்சிய பணத்திற்கு ஸகாத் கணிக்க வேண்டும். ஆகவே இங்கு மாதாந்த செலவு என்பது அவரின் வாழ்க்கைத் தரம், குடும்ப நிலை என்பவற்றின் அடிப்படையில் அமைந்த அவரது சூழலில் பொதுப்படையாக நிலவும் ஒரு குறிப்பிட்ட தொகை. அதை இன்னுமொருவர் நிர்ணயம் செய்ய முடியாது.

அதேபோன்றே பாவிக்கும் நகைகள் தவிர்ந்த ஏனைய நகைகளுக்குதான் நகைக்காக ஸகாத் கடமையாகும். இங்கு பாவனைக்கான நகைகளின் அளவு என்பது ஆளுக்காள், வாழும் சூழலுக்கு சூழல் வேறுபடும். ஆகவே ஒருவரை நோக்கி ஒருவர் குறை காண முடியாது.

இந்த ஒப்பீட்டாய்வு அடிப்படையின் இறுதியான முடிவாக, சமூகத்தில் நிலவும் பொதுத்தன்மை மற்றும் தமக்கு விதியாகப் போகின்ற விடயத்தின் இடம், நாம் வாழும் சூழல், தமது வாழ்க்கை தரம், தேவை, மற்றும் தனது குடும்ப நிலைமை என்பவற்றை கொண்டே நாம் ஒரு விடயத்தின் மீது கடமையாகின்றோமா? இல்லையா? என்பதை நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறே ஹஜ்ஜும் கடமையாகும்.

அதாவது, ஹஜ் என்பது சவூதி என்ற செல்வந்த நாடு சென்று, அந்நாட்டு தரங்களுடன் அமைந்த ஹோட்டல்களில் தமது வாழ்க்கை தரத்தோடு ஓரளவு ஒத்துப் போகும் ஹோட்டல்களை தேர்வு செய்து அவற்றின் கட்டணங்களைப் பொருத்தி , மேலும் ஹஜ்ஜுக்காக சவூதி, இலங்கை அரசாங்கங்கள் அறவிடும் ஏனைய உட்கட்டமைப்பு கட்டணங்களையும் செலுத்துமளவுக்கு யாருக்கு பொருளாதார வசதி உள்ளதோ அவருக்கு ஹஜ் கடமை ஆகும்.

ஹஜ் என்பது சவூதி என்ற நாட்டில் இருக்கும் மக்கா நகரில் நிறைவேற்றப்பட வேண்டிய விடயம்; மேலும் அந்த சவூதி அரசின் வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்றாற் போல் ஏனைய நாட்டு அரசாங்கங்கள் மூலமாகவே யாத்திரிகர்கள் அவர்களது நாட்டுக்குள் பிரவேசித்து அந்த ஹஜ் வணக்கத்தை மேற்கொள்ள முடியும் என்ற அவர்களின் immigration law அடிப்படையிலான ஹஜ் பயண பொறி முறைகள் சவூதி அரசால் உலக நாடுகளுக்கு வழி நடாத்தப்படுகிறது. அதன் அடிப்படையில் இதுவரை காலமும் அரச அங்கீகாரம் பெற்ற முகவர்களினூடாகவே இலங்கை அரசாங்கமும் இந்த ஹஜ் பயணத்தை நெறிப்படுத்துகிறது. இதற்கமைவாக பார்ப்பதாயின், ஹஜ் கடமையான ஒருவர், தான் முஸ்லிம் என்ற ஒற்றைக் காரணத்திற்காக ஹஜ் என்ற வணக்கத்தை தனியே சென்று நிறைவேற்றுவது என்பது சாத்தியமன்று.

மேலும் சவூதி அரேபியாவில் நிலவும் நிகர ஹோட்டல் கட்டணம், அவர்கள் அறவிடும் ஹஜ் உட்கட்டமைப்பு வசதிக்கான நிகர கட்டணம் முஅல்லிம் (சவூதி அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் முகவர்கள்) -rates, ஹஜ் வரி என்பவற்றை கீழ்வரும் வலைத்தளங்களில் தேடிக் கொள்வதன் மூலம் அவற்றின் நிகர பெறுமானங்களை அறிந்து கொள்ள முடியும்.

http://www.arabnews.com/node-/952366-/saudi&arabia / http://qsaudi.com/low&cost&hajj&packag-es&in&saudi&arabia&for&year&2015/ / http://www.millathhajservice.com/haj&itenary.html

மேலும் விமான டிக்கட்டின் வெளிப்படைத்தன்மையை airlines மூலமோ அல்லது air ticket agency கள் மூலமாகவோ அறிந்து கொள்ள முடியும்.

ஆகவே இன்னும் விரிவாக சொல்லுவதாயின்,

1) நிகர விமான டிக்கட் கட்டணம், 2)நிகர சவூதி ஹோட்டல் கட்டணங்கள், 3)உணவுக்கான செலவினம், 4) நிகர முஅல்லிம், 5)சவூதி அரசின் ஹஜ் வரி, 6)இலங்கை அரசின் ஏனைய கட்டணங்கள் (அரசின் அறவீடுகள்/ அரச அங்கீகாரம் பெற்ற முகவர்களின் சேவை தொகை ) அடங்கிய மொத்த கூட்டுத்தொகை பெறுமானத்தை எவர் ஒருவர் தமது ஹலாலான சம்பாத்தியத்தின் மூலம் பெற்றுக்கொள்கின்றாரோ அவருக்கு ஹஜ் என்பது கடமையாக மாறும்.

மாதாந்த செலவுகள் போக எஞ்சியவற்றுக்கு ஸகாத் கொடுக்க வசதி இல்லையெனில் எவ்வாறு தமக்கு ஸகாத் கடமையில்லையோ அவ்வாறு மேற்கூறப்பட்ட பொருளாதார வசதி அற்ற ஒருவருக்கு ஹஜ் விதியாவதில்லை.

வாழ்நாளில் ஒரு முறையாவது ஸகாத் கொடுக்க முயற்சிக்க தமது உழைப்பு வருமானத்தை கூட்டிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அது போல ஹஜ்ஜுக்காகவும் தம்மை தயார்படுத்திக் கொள்ள தமது பொருளாதாரத் தகைமையை பெருக்கிக் கொள்ள வேண்டும். அப்போதே ஹஜ் என்பது கடமையாக மாறும்.

மேலும் அனைத்துக்கும் காரண காரியங்களை வேண்டி நிற்கும் இன்றைய சூழ்நிலையில் இலங்கை ஹஜ் மற்றும் அவற்றின் செலவுகள் பற்றிய தெளிவின்மை மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றமையினால் வீணான தர்க்கங்களும் ஹஜ் முகவர்கள் பற்றிய எதிர்மறை எண்ணங்களும் மிக இலகுவாக விதைக்கப்படுகின்றன. மேலும் சில முகவர்களின் உளத் தூய்மையற்ற போக்கும் அவற்றுக்கு காரணம் என்பது மறுப்பதற்கு இல்லை. ஆகவே இந்த ஹஜ் பயண ஏற்பாட்டு முறைமை அவற்றின் செலவினம் எவ்வாறு அமைகின்றது என்பதை விளக்கமாக புரிந்து கொண்டால் தேவையில்லாத தப்பெண்ணங்களைக் களைவதோடு, அதனை தோற்றுவிப்பவர்களின் எண்ணங்களையும் புரிந்து கொள்ள முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் சவூதி அரசாங்கம் மூலம் ஹஜ் பயண ஏற்பாட்டை மேற்கொள்ளும் முறை MRCA மூலம் அரச அங்கீகாரம் பெறும் முகவர்கள் தமக்கு திணைக்களத்தால் கிடைக்கப் பெறும் license I எடுத்துக் கொண்டு ஹஜ் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ள சவூதி செல்வர். சவூதியில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தில் தமது license ஐ உறுதிப்படுத்திய பின்னர் முஅல்லிம் தெரிவு மற்றும் தங்குமிட ஏற்பாடுகள் என்பவற்றை தேடிப் பெற்றுக்கொள்ள மக்கா, மதீனா செல்வார்கள். மேலும் அவற்றுக்கான கட்டணங்களை முழுவதுமாக செலுத்தியதன் பிற்பாடு தமக்கு கிடைக்கும் booking certificate களை சவூதி ஹஜ் அமைச்சில் சமர்ப்பித்த பின் bar code stickers எனப்படும் பற்றுச்சீட்டு முறைமை ஒவ்வொரு யாத்திரிகருக்கும் வழங்கப்படும். அவ்வாறு கிடைக்கப்பெற்ற மறு கணத்திலிருந்து ஒரு யாத்திரிகர் தனது ஹஜ் பயண ஏற்பாட்டை cancel செய்வாராயின் அவரது பணம் முஅல்லிம்களால் மீளளிக்கப்படாது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

பின் அதனை எடுத்துக் கொண்டு இலங்கை வரும் முகவர்கள் airlines அல்லது air ticket agency களிடம் முற்பதிவு செய்து வைத்திருக்கும் உரிய தினத்தில் அமைந்த tickets களை முழுப்பணம் செலுத்தி பெற்றுக்கொள்வர். பின்னர் தமக்கு கிடைக்கப் பெற்ற bar code sticker களை ஒவ்வொரு ஹாஜியின் கடவுச்சீட்டிலும் ஒட்டி திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பார்கள். பின்னர் அவை இலங்கையிலிருக்கும் சவூதி embessy க்கு விசா பதிவுக்கு அனுப்பி மீண்டும் பெறப்பட்டு முகவர்களுக்கு கையளிக்கப்படும்.

மேலும் ஹாஜிகளுக்கான உணவு ஏற்பாடுகளுக்காக இலங்கை cook களை முகவர்கள் சவூதிக்கு அழைத்துச் செல்கின்றனர். ஹஜ் காலங்களில் மக்கா நகர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக hotel களில் சமைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகையால் மக்கா மற்றும் மதீனாவில் சமைப்பதற்கு என்று பிரத்தியேக இடங்கள் முகவர்களால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு ஹாஜிகளுக்கான உணவுத்தேவை பூர்த்தி செய்யப்படுகின்றன.

அதுபோன்றே ஹாஜிகள் தமது ஹஜ் வணக்கத்தை தெளிவுடன் மேற்கொள்ள மௌலவிமார்களை தமது ஹஜ் குழுவில் உள்ளடக்கியிருக்க வேண்டும் என்ற திணைக்கள விதி முறைக்கமைவாக ஒவ்வொரு முகவர்களும் தமது ஒவ்வொரு 50 ஹாஜிக்கு ஒரு மௌலவி வீதம் அழைத்துச் செல்கின்றனர்.

மேற்குறிப்பிடப்பட்ட சவூதியில் நிகழும் ஹஜ் ஏற்பாடுகளான முஅல்லிம் மற்றும் hotels booking என்பவற்றைப் பற்றி இன்னும் விரிவாக அறிந்து கொள்வதன் மூலம் அங்கு அமையப் போகும் ஹஜ் பயண ஒழுங்கை அறிந்து கொள்ள முடியும்.

### 1 முஅல்லிம்

சவூதி அரசாங்கம் தமது நாட்டுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு நேர்த்தியான சேவைகளை வழங்கும் பொருட்டு உலக நாடுகளின் பிராந்தியங்கள் அடிப்படையில் முஅல்லிம் எனப்படும் அரச அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அல்லது முகவர்களை ஆண்டு தோறும் தெரிவு செய்கின்றனர்.

ஒரு யாத்திரிகர் சவூதி விமான நிலையத்தில் enter ஆகி ஹஜ்ஜை முடித்துக் கொண்டு மீண்டும் விமான நிலையம் செல்லும் வரையான முழு பொறுப்பையும் முஅல்லிம்களே ஏற்றுக் கொள்கின்றனர்.

மேலும்,ஹஜ்ஜுடைய நாட்களில் அதாவது பிறை 7 முதல் 13 வரையான நாட்களில், ஹாஜிகளுக்கான மினா மற்றும் அறபா தங்குமிடம், உணவு ஏற்பாடுகள் என்பவற்றை வழங்குவதோடு, கீழ்வரும் போக்குவரத்து வசதிகளையும் வழங்குவதும் முஅல்லிம்களின் பொறுப்பாகும்.

1) jeddah airport & to & makkah hotel, 2) makkah hotel & to & mina hut, 3) mina hut & to & arafath hut, 4) mina hut & to & makkah hotel, 5) makkah hotel & to & madhina hotel, 6) madhina hotel & to & jeddah airport)

இந்த ஒழுங்குவரிசை முகவர்கள் பயணிக்கும் ஹஜ் முறைமைக்கு அமைவாக முன்னுக்கு பின் மாறுபடும்.

மினா தங்குமிடத்தைப் பொறுத்தவரை, சவூதி அரசால் முஅல்லிம்களுக்கு certain mechanism மூலம் hut களை அமைக்க மினாவில் உள்ள இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும் . ஜம்ராத்திற்கும் - hut க்கும் இடைப்பட்ட தூரம் குறையும் போதே இலாபம் சம்பாதிக்க முடியும் என்பதனால் மினா இட ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்குள் பெரும் போட்டியும் உருவாகும். இந்தத் தூரமே அவர்களின் கட்டண அறவீட்டில் பாரிய பங்கு வகிக்கிறது.

மேலும் அறபாவிலிருந்து பிறை 9 சூரிய மறைவுக்கு முன் முஸ்தலிபா சென்று, அங்கு சில மணித்தியாலங்கள் தரித்து நிற்பது ஹஜ்ஜின் கடமைகளில் ஒன்று. போக்குவரத்து வசதிகளை பொறுப்பேற்கும் முஅல்லிம்கள் இந்த அறபா - முஸ்தலிபாவுக்கான போக்குவரத்திற்கு bus வசதி செய்து கொடுப்பதில்லை என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். ஆனாலும் முகவர்கள் பெரும்பாலானோர் ஹாஜிகளின் சௌகரியத்தை கருத்திற் கொண்டும் சூரிய மறைவுக்கு முன் அறபாவிலிருந்து வெளியாகி முஸ்தலிபா செல்ல வேண்டும் என்பதாலும் அறபா எல்லைகளில் park செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் களை அதன் drivers களுக்கு பணம் கொடுத்தும் ஏனைய முகவர்களோடு அடித்து பிடித்தும் ஒதுக்கிக் (occupy) கொள்கின்றனர். இவை மினாவிலிருந்து அறபாவுக்கு ஹாஜிகளை ஏற்றிவந்த முஅல்லிம் பஸ்வண்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வாறு அந்தப் பஸ்வண்டிகளை அடைந்து கொள்வதற்கு ஹாஜிகளின் இடைத்தொடர்புகள் (coordination ) மிக முக்கியம்.

அடுத்து பிறை 10 அன்று சூரியன் உதயமானவுடன் முஸ்தலிபாவிலிருந்து மினா ஜம்ராத்துக்கு செல்லும் போதும் முஅல்லிம்கள் bus வழங்குவதில்லை. இதற்கு ஒரு தீர்வாக கடந்த வருடங்களில் musthalifa & to & mina train service சவூதி அரசால் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதன் 250 றியால் மேலதிக கட்டணம் என்பதனையும் விடுத்து அதன் பாவனை முறை, அதன் நெரிசல் தன்மை என்பவற்றின் காரணமாக பெரும்பாலானோர் அதனைத் தவிர்ந்து கொள்கின்றனர்; மாறாக காலங்காலமாக கால் நடையாக செல்லும் முறையே பின்பற்றப்படுகிறது.

### 2. சவூதி ஹோட்டல்களின் வியாபார முறை

சவூதி ஹோட்டல்கள் துல்-கஃதா மற்றும் துல்-ஹஜ் மாதத்தை 3 வகையாக பிரித்தே ஹஜ்ஜுக்கான தங்குமிட விலையை அறவிடுகின்றன.

(I) முஃஸம்:- துல்ஹஜ் பிறை 1 -16 வரை மக்கா ஹோட்டலில் தங்குதல் (அவ்வாறே ஹஜ்ஜுடைய நாட்களில் (பிறை 7 தொடக்கம் 13 வரை) ஹஜ்ஜையும் முடித்துக் கொண்டு பின்னர் மதீனா சென்று அங்கு 10 நாட்கள் தங்குதல் பின்னர் அங்கிருந்தவாறு ஜித்தா விமானநிலையம் சென்று நாடு திரும்புதல். இந்த வகையிலான ஹஜ்முறையில் ஹோட்டல் விலையில் பெரும்பாலும் பேரம்பேசி விலைக்குறைவைப் பெறுவது மிகக்கடினம்; ஆகவே இதன் கட்டணம் மிகஅதிகம், அவ்வாறே குறைந்த விலைக்கு பெற்றாலும் அந்த ஹோட்டல்கள் தரத்தில் குறைந்ததாகவே அமையும்

(II) அவ்வல் மதீனா:- துல்-ஹஜ் பிறை 1 வரைக்கும் முந்திய நாட்களுக்கான மக்கா மதீனா hotal (துல் - கஃதா இரண்டாம் வாரம் அளவில் மக்கா சென்று அங்கு 10 நாட்களும் பின்னர் மதீனா சென்று 10 நாட்களும் தங்குதல். இறுதியாக ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக துல்-ஹஜ் பிறை 7 க்கு முன் மக்காவின் 3 km தொலைவிலுள்ள அஸீஸியா என்ற இடம் திரும்புதல். பின்னர் ஹஜ்ஜைப் பூர்த்தி செய்துவிட்டு மீண்டும் அஸீஸியா வந்து பின்னர் ஜித்தா விமானநிலையம் செல்லுதல்.

(III) ஆகிர் மதீனா:-துல்-ஹஜ் பிறை 16க்கு பிந்திய நாட்களுக்கான hotels ( துல்-ஹஜ் பிறை 1 பின் நேரடியாக அஸீஸியா சென்று அங்கிருந்தவாறு உம்றாவை முடித்துக் கொண்டு பிறை 7 இல் ஹஜ்ஜுக்காக மினா செல்லுதல். பின் ஹஜ்ஜை முடித்துக்கொண்டு மீண்டும் அஸீஸியா வந்து பின் மக்கா ஹோட்டலில் 10 நாட்கள் தங்குதல்.

இறுதியாக மதீனா சென்று அங்கும் 10 நாட்கள் தங்கிவிட்டு பின்னர் ஜித்தா விமானநிலையம் செல்லல்.

**- அஸீஸியாவில் தங்கும் வழமையின் காரணம்--**

இதில் கடைசி இரு (அவ்வல்/ஆகிர்) முறைகளிலும் ஹஜ்ஜுக்கான ஏற்பாடுகளை செய்யும்போது முறையே துல்-ஹஜ் பிறை 5-7 மற்றும் 13- 15 அஸீஸியாவில் தங்குவது தவிர்க்க முடியாததாக அமைகின்றது. ஏனெனில் முஃஸம் முறையிலான ஹஜ்ஜுக்கே பிறை 1 -16 வரை ஹோட்டல்கள் விற்பனை செய்யப்படுவதால் அஸீஸியாவில் தங்கும் வழமை பின்பற்றப்படுகிறது. அவ்வாறு அஸீஸியாவில் தங்காமல் பிறை 1 -16 வரைக்குமான நாட்களிலும் மக்காவிலே தங்க வேண்டுமாயின் முஃஸம் முறையில்தான் ஹஜ் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். முஃஸம் முறையில் மட்டுந்தான் ஹஜ் பயணம் செல்வதாக இருந்தால், இலங்கை மக்களின் ஹஜ் யாத்திரிகை எண்ணிக்கை கணிசமான முறையில் வீழ்ச்சி அடையும். ஏனெனில், பிறை 1-16 வரையான காலப்பகுதியில் சவூதி ஹோட்டல்கள் அறவிடும் கட்டணங்கள் என்பது, சாதாரண நாட்களை விட 5 மடங்கு அதிகம்.

ஆகவே எமது நாட்டு மக்களின் பொதுமைப்படுத்தப்பட்ட பொருளாதார வசதியின் அடிப்படையில் சவூதி ஹோட்டல் கட்டணங்களை எமது மக்களால் effort பண்ண இயலுமானமை அமைந்தால் மாத்திரமே ஹஜ் என்ற வணக்கம் கடமையாக அமையும் என்ற காரணியால் ஹஜ் கட்டணத்தை ஓரளவு பொருந்திக் கொள்ளக் கூடிய முறையில் குறைப்பதற்காக இந்த அஸீஸியாவில் தங்கும் வழமை இலங்கை ஹஜ் முகவர்களால் இது வரையான காலமும் கையாளப்படுகிறது.

இதற்கு திணைக்களமும் அங்கீகாரம் வழங்கி அந்த முறைமையில் 4 நாட்களுக்கு மேல் அஸீஸியாவில் தங்கக்கூடாது என்ற கட்டாய விதிப்பை ஹாஜிகளின் சௌகரியம் கருதி விதித்திருக்கின்றது. இருந்தாலும் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஹஜ் ஹோட்டல் booking system திற்கு அமைவாக 15 நாட்களுக்கான கட்டணத்தை ஹோட்டல்கள் அறவிடுகின்றன என்பதனால் அஸீஸியாவில் தங்கும் நாட்கள் 4 ஆக இருப்பினும் 15 நாட்கள் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

இதுவரை ஹஜ் பயண ஏற்பாடுகளை விளங்கிக் கொண்ட நாம் அவற்றின் ஒவ்வொரு பொறிமுறைகளிலும் செலவாகும் செலவினங்களின் தன்மை பற்றி அறிந்து கொள்வோம்.

### Hotels

இலங்கைக்கான கோட்டா 2800 என்பதால் இந்திய - இந்தோனேசிய நாடுகளின் இலட்சக்கணக்கான கோட்டாக்களோடு ஒப்பிடுகையில் ஒரு சிறிய தொகை.

ஒப்பீட்டளவில் அவ்வாறு சிறுதொகை கோட்டாவைப் பெற்ற இலங்கை முகவர்கள், இறுதி நேரத்தில் மக்காவுக்கு booking செய்யச் சென்று அங்குள்ள தரகர்களின் உதவியுடன் hotels களிடம் பேரம் பேசி 5000 - 15,000 குகீ வரை விலை நிர்ணயிக்கப்பட்ட ஹோட்டல்களை 1000 - 2500 sr என்ற விலைக்கு bargain செய்கின்றனர்.

(வெள்ளிக்கிழமை தொடரும்...)



# லண்டன் கிரண்பெல் டவரில் தீ:

## 27 மாடிகளிலுள்ள 120 வீடுகளும் எரிந்து நாசம் 6 பேர் பலி; பலர் மாயம்; 50 பேர் படுகாயம்




லண்டனில் 27 மாடிகள் கொண்ட கிரண்பெல் டவர் அடுக்குமாடி கட்டடத்தில் நேற்று ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் கட்டடத்திலுள்ள 120 வீடுகளும் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

இதில் அறுவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளனர் (பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரை). எனினும் தீப்பற்றியெரிந்த கட்டடத்திலிருந்து 50 பேர் மீட்கப்பட்டு லண்டன் நகரிலுள்ள 5 வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு லண்டனில் கிரண்பெல் டவர் என்ற 27 மாடிகளை கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பு கட்டடம் அமைந்துள்ளது. இக் கட்டடத்தின் 2ஆவது தளத்தில் நேற்று நள்ளிரவு 1.15 மணிக்கு பயங்கர தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து தீயானது மளமளவென 27 மாடிகளுக்கும் பரவியுள்ளது. அத்தோடு கட்டட பாகங்கள் தீயால் வெடித்து சிதறுவதை அங்கிருந்து வெளியாகும் காணொளிகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இதனையடுத்து 40 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்ததுடன், 200 வீரர்கள் தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.


1974ஆம் ஆண்டு கட்டப்பட்ட கிரென்பெல் டவரில் 120 வீடுகள் உள்ளன. இந்நிலையில் திடீரென ஏற்பட்ட இத்தீவிபத்தால் இவ்வீடுகளில் வசித்தோரின் நிலை என்னவென்ற தகவல்கள் வெளியாகவில்லை. எனினும் இத்தீவிபத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.




அத்தோடு கட்டடம் முழுவதும் தீ பரவியிருந்தவேளை சுமார் 600இற்கும் மேற்பட்டோர் தப்பிக்க முயன்றுள்ளதாகவும் அருகிலிருந்தவர்கள் தெரிவித்துள்ளனல். அத்தோடு குறித்த கட்டடப் பகுதியில் எரியும் பிளாஸ்டிக் பொருட்களில் இருந்து வெளியேறும் புகையை சுவாசித்ததால் பலருக்கு மூச்சுதிணறல் ஏற்பட்டுள்ளது.

தீ கொளுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. கட்டிடத்துக்குள் எத்தனை பேர் சிக்கியிருக்கின்றனர் என்பதை இதுவரை உறுதி செய்யமுடியவில்லை. ஆனால், தீ பிடித்தவுடன் கட்டிடத்திலிருந்து உதவிக்குரல்கள் ஒலித்ததாக கட்டடத்தின் எதிர்ப்புற குடியிருப்புவாசிகள் தெரிவித்துள்ளனர். தங்கள் உறவுகளைத் தேடி சம்பவப் பகுதிக்கு பலரும் வந்தவண்ணம் உள்ளனர். அது மட்டுமல்லாது சம்பவப்பகுதியில் லண்டன் ஆம்புலன்ஸ் சேவையும், தீயணைப்பு சேவையும் சேவையில் ஈடுபட்டுள்ளன.

தீயினால் பாதிக்கப்பட்டுள்ள கட்டடம் இடிந்துவீழும் நிலையிலுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.







தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லை என்றபோதிலும், இந்நிலையில் குறித்த கட்டடதொகுதியில குளிர்சாதனபெட்டியொன்று வெடித்து சிதறியதாலேயே மேற்படி தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலகச் செய்திகள்

## பால் தட்டுப்பாட்டைச் சமாளிக்க பசுக்களை இறக்குமதி செய்யும் கட்டார்



கட்டாரில் நிலவும் பால் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, 4,000 மாடுகளை விமானம்மூலம் இறக்குமதிசெய்யத் கட்டார் அரசு திட்டமிட்டுள்ளது.

தீவிரவாதத்துக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் கூறி சவூதி உள்ளிட்ட ஏழு நாடுகள் கட்டாருடனான தூதரகம் உட்பட கட்டாருடனான அத்தனை தொடர்புகளையும் துண்டிப்பதாக, கடந்த 5ஆம் திகதி அறிவித்தன. இந்த அறிவிப்பால், கட்டாரில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று அந்த நாட்டு அரசு கூறிவருகிறது.

தடை உத்தரவைத் தொடர்ந்து, பால் மற்றும் பால் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவிவருவதால், பசு இறக்குமதியில் கட்டார் அரசு தீவிரம்காட்டிவருகிறது. கட்டாருக்கு சவூதியிலிருந்தே பால் இறக்குமதி செய்யப்படுவது வழக்கம்.

பால் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவிலிருந்து 4,000 மாடுகளை வாங்கியுள்ளது கட்டார் அரசு. 'பவர் இன்டர்நேஷனல் ஹோல்டிங்' என்னும் நிறுவனம் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளது.

அவற்றை கப்பல்மூலம் கட்டாருக்குக் கொண்டுவர முதலில் இந்த நிறுவனம் முடிவுசெய்துள்ளது. பின்னர், விமானம்மூலம் மாடுகளைக் கொண்டுவர முடிவுசெய்யப்பட்டுள்ளது. மாடுகளைக் கட்டாருக்குக் கொண்டுவர, 60 விமானங்களைப் பயன்படுத்தவுள்ளனர். இவ்வளவு மாடுகளை விமானம்மூலம் இறக்குமதி செய்வது இதுவே முதன்முறை. இது ஒரு மிகப்பெரிய முயற்சி என்று தெரிவித்துள்ளார், பவர் இன்டர்நேஷனல் ஹோல்டிங் நிறுவனத் தலைவர் மெதஸ் அல் கப்யாத் தெரிவித்தார்.

14

2017 ஜூன் 15

ஹிஜ்ரி 1438 ரமழான் 20

நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி

ரமழான் முபாறக் பரிசு மழை

நவமணி

| போட்டி - 01 | போட்டி - 02 |
|---|---|
| (திங்கள் – வெள்ளி) | (வெள்ளிக்கிழமை) |
| 1ஆம் பரிசு : உம்ரா வோதீ<br>2ஆம் பரிசு : மடிக் கணனி<br>3ஆம் பரிசு : கணனி<br>22 ஆறுதல் பரிசுகள் | கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும் |

போட்டி நிபந்தனைகள்

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜுலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜுலை 15, 2017

1. உமர் (ரழி)யின் மனமாற்றத்திற்கு காரணமான வசனங்கள் எந்த சூராவில் இடம்பெறுகின்றது?
2. நபிகளார் காலத்தில் தடைசெய்யப்பட்ட திருமண முறை யாது?
3. 'இஸ்லாம்' என்ற அரபுச் சொல்லின் பொருள் என்ன?
4. நோபல் பரிசு பெற்ற 03 முஸ்லிம்களைத் தருக?
5. 'தப்ஸீருல் பயான்' எனும் நூலின் ஆசிரியர் யார்?

நவமணி போட்டி - 14 நவமணி
15.06.2017 - வியாழக்கிழமை

பெயர் :..............................

முகவரி :..............................

தொலைபேசி :..............................

தே.அ.அ. இல.:..............................

கையொப்பம் :..............................

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் றிஷாத் 077 2415415

## பங்களாதேஷில் கடும் மழை; 144 பேர் பலி: பலர் மாயம்

### பலர் காயம்; மீட்பு பணிகள் தீவிரம்



பங்களாதேஷில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி144 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷில் பெய்துவரும் கடும் மழையால் நாட்டின் பல்வேறு பகுதிகளின் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளம் காரணமாக மண்சரிவும் ஏற்பட்டது.


மக்கள் உறங்கிக் கொண்டிருந்த இரவு நேரத்தில் மண்சரிவு ஏற்பட்டதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதில் குழந்தைகளும் அடங்குவர்.

மழை வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி இதுவரை 144பேர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் பலர் மண்ணில் புதைந்துள்ளதாகவும் பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 100இற்கும் மேற்பட்டோர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவு காரணமாகவே அதிகளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பலர் இருப்பிடங்களை இழந்துள்ளனர். மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் மீட்பு பணிகளிலும் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

## வளைகுடா நாடுகளுக்கிடையிலான முறுகல் விரும்பத்தகாத விளைவுகளுக்கு இட்டுச்செல்லும்

### குவைத் அமீர் எச்சரிக்கை



கட்டார் மற்றும் சக வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் (ஜி.சி.சி) மூன்று அங்கத்துவ நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை விரும்பத்தகாத விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என்று இந்த முறுகலுக்கு தீர்வுகாண மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் குவைத் அமீர் எச்சரித்துள்ளார்.

ஷெய்க் சபாஹ் அல் அஹ்மது அல் சபாஹ் குவைத் தேசிய செய்தி நிறுவனத்திற்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

37 ஆண்டுகளுக்கு முன்னர் ஜி.சி.சியை கட்டியெழுப்பிய தலைமுறை என்ற வகையில் உறுப்பு நாடுகளுக்கு இடையில் பிளவு ஏற்பட்டிருப்பதை பார்க்க மிகக் கடினமாக்கவுள்ளது. இது விரும்பத்தகாத விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்.

ஜி.சி.சியை கட்டியெழுப்பிய தருணத்தில் இருந்தவன் என்பதாலேயே சகோதரர்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் மத்தியஸ்த முயற்சிகள் இன்றி என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. என்னால் அப்புறப்படுத்த முடியாத பொறுப்பாக அது உள்ளது.

எத்தனை கடினமாக இருந்தபோதும் பரவாயில்லை சகோதரர்களுக்கு இடையில் நடுநிலை வகிக்க என்னாலான முயற்சிகளை நான் செய்வேன் என்றும் குவைத் அமீர் இதன்போது தெரிவித்திருந்தார்.

## கட்டாரை தனிமைப்படுத்தியது மனிதாபிமானமற்ற செயல்

### துருக்கி குற்றச்சாட்டு



கட்டாருடனான தூதரக உறவை சவூதி உள்ளிட்ட ஏழு நாடுகள் துண்டித்து அந்நாட்டை தனிமைப்படுத்தியது மனிதாபிமானமற்ற செயல் என்று துருக்கி குற்றம்சாட்டியுள்ளது.

ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக நிதி உதவி செய்வதாக குற்றம்சாட்டி கட்டாருடனான தூதரக உறவை சவூதி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், எகிப்து, யெமன், லிபியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் துண்டித்தன.

இதனால் மேற்கண்ட நாடுகளுக்கிடையே விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டன. தூதர்கள் திரும்ப பெறப்பட்டனர். மேலும் மசகு எண்ணெய் விலை உயரும் அபாயம் நிலவுகிறது. கட்டாரில் உணவு பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

இந்நிலையில், கட்டாருடனான தூதரக உறவை சவூதி உள்ளிட்ட நாடுகள் துண்டித்து அந்நாட்டை தனிமைப்படுத்தியது மனிதாபிமானமற்ற செயல் என்று துருக்கி குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக துருக்கி ஜனாதிபதி அர்துகான், கட்டார் தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடு அல்ல. துருக்கியுடன் இணைந்து ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

# இன,மத...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கூறினார். மேலும் அவர் கூறும்போது,

நான் சிங்களவராக, பௌத்தனாக இருப்பதற்கு பெருமைப்படுகின்றேன். அதேபோன்று இலங்கையனாக இருப்பதற்கும் பெருமைப்படுகின்றேன். நான் இலங்கையன் என்ற வகையில் அனைத்து மதம் மற்றும் கலாசாரத்தை மதிக்கின்றேன்.

வேறு மதங்களையும் கலாச்சாரத்தையும் பார்த்து அதனை எதிர்ப்பதாக, வெறுப்பதாக இருந்தால் நாம் இலங்கையராக இருக்க முடியாது. அதனால் நாட்டின் அனைத்து மக்களுக்கும் இலங்கையராக அமைதியாக வாழும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவே நாம் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

முஸ்லிம் வணக்கஸ்தலங்கள், வியாபார நிலையங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்கு நடவடிக்கை எடுக்க கூறியுள்ளோம். எந்தவொரு மதத்தினருக்கோ இனத்தினருக்கோ எதிராக செயற்படுவதாக, வன்முறையில் ஈடுபடுவதாக இருந்தால் அவர்களை விசாரித்து அவர்களை கைது செய்து வழக்கு தாக்கல் செய்ய பொலிஸாருக்கு கூறியுள்ளோம். அதன்படி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், சிலரை நீதிமன்றித்தில் ஆஜர்படுத்தியும் உள்ளோம். 2014ஆம் ஆண்டு மத பேதத்தால் நாட்டில் ஏற்பட்ட பாதிப்புக்களை நாம் அறிவோம். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் நற்பெயருக்கும் பாதிப்பு ஏற்பட்டதை நாம் கண்டோம். நாம் மீண்டும் அவ்விடத்திற்கு செல்லும் எதிர்பார்ப்பு இல்லை. அந்த தேவையுமில்லை. அதற்கு மீண்டும் இடமளிக்க மோட்டோம்.

அதன் காரணமாக விஷேடமாக பொலிஸார் மற்றும் உரிய தரப்பினருக்கு, சட்டத்தையும் அமைதியையும் முறையாக நடைமுறைப்படுத்த கூறுகின்றோம்.

தேவையாயின் அதற்கு உரியவாறான புதிய சட்டங்களையும் பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்து நிறைவேற்றிக் கொள்வோம் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறினார்.

# ஞானசார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரிஷாட் பதியுதீனே காரணம் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்திருக்கும் கூற்றுத் தொடர்பில், அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

2014 ஆம் ஆண்டு வில்பத்துக் காட்டை அழித்து முஸ்லிம்களை அமைச்சர் ரிஷாட் குடியேற்றியதனாலேயே ஞானசார தேரர் உருவாகினார் என்று பொறுப்பற்ற வகையில் கூறியிருக்கும் கருத்து எல்லோரையும் முட்டாளாக்கும் செயல் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

20 வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியை முஸ்லிம்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்து, தங்களது தலைவரை பிரதமராக்கியதற்கு நீங்கள் செய்யும் நன்றிக்கடனும் கைமாறுமா இது? என அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒட்டு மொத்த முஸ்லிம்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களும் அவர்கள் சார்ந்த சிவில் அமைப்புக்களும் இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவந்தமைக்கு கிடைக்கின்ற பரிசு தான் இது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் பல மில்லியன் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் நாசமாக்கப்பட்டும், தீக்கிரையாக்கப்பட்டும் கொண்டிருக்கின்றன. லயர் ஷோர்ட் என்றும் இன்ஷூரன்ஸ் தந்திரோபாயம் என்றும் சட்டத்தைப் பாதுகாப்பவர்கள் இன்னும் கூறிக்கொண்டு குற்றவாளிகளை தொடர்ந்தும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் பொறுமையின் உச்சக் கட்டத்தில் இருக்கின்றார்கள். இந்த நிலையில் உங்களது கூற்று வெந்த புண்ணில் வேல் பாய்வது போன்று உள்ளது. உலகிலே எந்த நாட்டிலும் இல்லாத புதுமை ஒன்றைத்தான் இந்த நாட்டிலே நாங்கள் காண்கின்றோம். முஸ்லிம்களின் அழிவுகள் குறித்து நாங்கள் பேசும் போது எங்களை இனவாதிகள் என்று முத்திரை குத்துகின்றீர்கள். நாங்கள் ஊமைகளாக, பேசா மடந்தைகளாக இருக்க வேண்டுமென்றா இன்னும் எதிர்பார்க்கின்றீர்கள்? வில்பத்தை யார் அழித்தார்கள்? ஞானசாரரை யார் உருவாக்கினார்கள் என்ற விடயங்களை உங்கள் தலைவரிடம் நீங்கள் கேட்டுத்தெரிந்த பின்னர் அவை பற்றி பேசுங்கள். இந்த விடயங்களை நீங்கள், நீங்களாகவே பேசவில்லை. உங்களை யாரோ பேச வைத்திருக்கின்றார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# ஊடக மாநாட்டில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரசினால் காரசாரமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் அமைச்சரவை முடிவுகளை அமைச்சரவையின் இணைப் பேச்சாளரான அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்து முடித்ததையடுத்து, இன, மதக் குரோத செயற்பாடுகள் தொடர்பில் நேற்று முன்தினம் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட கூட்டுத்தீர்மானம் குறித்தும் விளக்கமளித்து உரையாற்றினார்.

இதனையடுத்து உரையாற்ற வந்த அமைச்சரவையின் இணைப்பேச்சாளரான சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம், இன்னும் தேரர் (ஞானசார தேரர்) ஒழிந்து தானே இருக்கிறார் என்று முதலாவது கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு, ஆம். அவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று அமைச்சர் பதிலளித்ததையடுத்து, அத்தேரர், அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பில் தான் உள்ளார் என்று அண்மையில் அஸாத் ஸாலி தெரிவித்திருந்தார். இது குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன? என்று இன்னுமொரு கேள்வி எழுப்பப்பட்டமைக்கு,

இவ்விடயத்துடன் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் பெயரும் தான் பேசப்பட்டது. ஆனால், அவரோ நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது தனக்கும் தேரருக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று கூறியதுடன், தேரரின் சட்டத்தரணியான மனோஹர சில்வாவுக்கு தேரர் எங்குள்ளார் என்பது தொடர்பில் தெரியும் என்றும் இந்தச் சட்டத்தரணி தான் மஹிந்தவின் வழக்குகளுக்கு முன்னிலையாகின்றவர் என்றும் எமக்கு சுட்டிக்காட்டினார் என அமைச்சர் ராஜித பதிலளித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சரவையின் இன்னுமொரு இணைப்பேச்சாளரான அமைச்சர் தயாசிறி ஜயசேகர, வெறுமனே அமைச்சர் ஒருவர் தான் இத்தேரரை மறைத்துவைத்துள்ளார் என்றுக் அஸாத்ஸாலி கூறக்கூடாது. மாறாக அந்த அமைச்சர் யார் என்பதையும் வெளிக்காட்ட வேண்டும் என தெரிவிக்க, அஸாத்ஸாலி அந்த அமைச்சரின் பெயரையும் தான் வெளியிட்டார் என ஊடகவியலாளரும் அமைச்சருக்கு பதிலளிக்க, யார் அந்த அமைச்சர்? என மீண்டும் அமைச்சர் தயாசிறி வினவினார்.

இதற்கு, விஜயதாஸ ராஜபக்ஷ என ஊடகவியலாளரும் விடைக்கொடுக்க, அமைச்சர் எவருக்கும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்ற தேவை இடையாது. பொலிஸார் விசாரித்துக்கொண்டு தானே இருக்கிறார்கள். அப்போது யார் இதன் பின்னணியில் இருக்கிறார்கள் என்று தெரியவரும் என அமைச்சர் தயாசிறி கூறினார்.

இதனையடுத்து, நாம் அமைச்சர்கள். எனவே, வாய் வார்த்தையாக அன்றி செயற்பாட்டிலேயே இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும். கடைகளை எரித்த பிரதான சந்தேகநபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது பொதுபல சேனாவின் உறுப்பினர் என அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். அதற்கிணங்க விசாரணைகளும் தற்போது இடம்பெற்றுத் தான் வருகின்றன என அமைச்சர் ராஜித கருத்தொன்றை முன்வைத்தார்.

இக்கருத்தையடுத்து, நாட்டின் இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்கு பொதுபல சேனாவையும் ஞானசார தேரரையும் மட்டும் எவ்வாறு குற்றவாளியாக உங்களால் கூறமுடியும்? இந்த அமைப்பினர் தவிர்ந்த இன்னும் நிறைய குழுக்கள் நாட்டில் காணப்படுகின்றன.

அப்படியிருக்கையில், ஞானசார தேரரை மட்டும் குற்றவாளியாகக் கருதப்படுகின்றமைக்கு காரணம் என்ன? என்று முன்வைக்கப்பட்ட கேள்விக்கு கோபத்துடன் பதிலளித்த அமைச்சர் ராஜித, ஒரு ஊடகவியலாளர் ஞானசார தேரரை ஏன் இன்னும் கைது செய்யவில்லை என்று கேட்கிறார். தற்போது நீங்களோ இத்தேரரை ஏன் கைது செய்ய வேண்டும் என்றுக் கேட்கின்றீர்கள்?

அத்தேரரே தான் ஒரு இனவாதி அல்ல என்று இதுவரையிலும் கூறாத நிலையிலேயே நீங்கள் அவருக்கு சார்பாக கதைக்கின்றீர்கள். தேரர் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று பௌத்த தர்மத்தில் கூறியுள்ளது. எனவே, நான் உங்களிடம் கேட்கிறேன்;. அவ்வாறு தானா ஞானசார தேரர் நடந்துகொள்கிறார்? எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு அமைச்சர் ராஜித சற்று காரசாரமாக கருத்து வெளியிட மீண்டும் குறுக்கிட்ட அமைச்சர் தயாசிறி, தொல்பொருள் திணைக்களத்தின் காணிகளை எடுக்கிறார்கள் என்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு தரப்பினரும் இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் என்று பொதுபல சேனாவுக்கு எதிராக ஒரு தரப்பினரும் தற்போது பரஸ்பரக் குற்றங்களைக் கூறிக்கொண்டு தான் வருகிறார்கள். உண்மையில் இவ்விரு தரப்பினராலும் நாட்டின் நல்லிணக்கமே பாதிக்கப்படுகின்றது.

இதுவிடயத்தில் அரசும் பக்கச்சார்பின்றியே செயற்படும். இதற்காகத் தான் பொலிஸாரும் துரிதகதியில் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். நாம் இதுவிடயத்தில் நடுநிலையாகவே செயற்படுவோம் என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர் ஒருவர், நல்லாட்சி அரசின் வருகைக்குப் பின்னர் இனவாத சம்பவங்கள் குறைந்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால், கடந்த அரசிலும் பார்க்க இவ்வரசில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துத் தானே உள்ளன? என கேட்டமைக்கு,

எங்கே அதிகரித்துள்ளது? நீங்கள் என்ன 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிநாட்டிலா இருந்தீர்கள்? எனது தொகுதியில் மட்டும் 250 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வடக்குக்குச் சென்று பாருங்கள், அங்குள்ள பிள்ளைகளை கடந்த அரசினர் கடத்தியமை தொடர்பில் தாய்மார்கள் கண்ணீருடன் கூறுவார்கள்.

இப்போதெல்லாம் அப்படி நடக்கின்றதா? இல்லையே. நீங்கள் நினைப்பதைப்போல உடனடியாக இவற்றை நிறுத்திவிடுவது இயலாத காரியமாகும் என்று காட்டமாக பதிலளித்தார் அமைச்சர் ராஜித.

அதேநேரம், மஹிந்த அரசைக் குறை கூறும் நீங்களும் அவ்வரசின் அமைச்சராகத் தானே இருந்தீர்கள்? அப்போது ஏன் இவற்றுக்கு எதிர்ப்பினை வெளியிடவில்லை? என்று இன்னுமொரு வினா அமைச்சர் ராஜிதவிடம் வினவப்பட்டமைக்கு, யார் கேட்கவில்லை.

நாம் இப்போதும் எதிர்க்கிறோம். அப்போதும் எதிர்த்தோம். உங்களைப் போன்று பயப்படவில்லை. சில ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் கடந்த அரசின்போது எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பது தொடர்பில் நாம் மறக்கவில்லை.

மஹிந்த அரசின் செயற்பாடுகளை எதிர்த்துதான் நாம் வெளியேறினோம் என்பதையும் யாரும் மறந்துவிட வேண்டாம் என்று விடையளித்தார்.

இவ்வாறு காரசாரமாக சென்றுக்கொண்டிருந்த இந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்றனைய சில விடயங்கள் தொடர்பிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே நிலைமை வழமைக்குத் திரும்பியது.

# அனர்த்தத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் உனா மெக்கோலி நடவடிக்கையெடுத்துள்ளார்.

சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் இம்மக்களின் வாழ்க்கைத் தரம், சுகாதாரம், உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை எதிர்கொண்ட இயற்கை அனர்த்தத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட செயலகம் அவசர செயற்திட்டமொன்றின் மூலம் 22.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது.

வெள்ள அனர்த்தத்தில் 212 உயிர்கள் பலியானதோடு, 630,000 பாதிக்கப்பட்டனர். 79 பேர் தொடர்ந்தும் காணாமல் போயுள்ளனர். 18,000 வீடுகள் சேதமடைந்ததில் 75,000 மேற்பட்டவர்கள் இருப்பிடங்களை இழந்துள்ளனர்.

சர்வதேச நாடுகளின் நிதியுதவிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை வழங்க நடவடிக்கையெடுப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இதில், ஜனாதிபதியின் பெயருடன், அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் மூன்று சகோதரர்களின் பெயர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் இருவரின் பெயர்களுடன் மேலும் ஒருவரின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த செப்புத்தாள்கள் இரண்டுநாட்களுக்கு முன்பு இளைஞரிடம கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், ஜனாதிபதியின் மற்றும் அதில் பொறிக்கப்பட்டிருந்த பெயர்களின் வரைப்படங்களும் அதில் பொறிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேலும், இலங்கை கடற்படைக்கு பாகிஸ்தானால் வழங்கப்படும் பயிற்சி நடவடிக்கைகளை தொடர்ந்தும் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் கடற்படைத் தளபதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தான் அரசினால் வழங்கப்பட்ட உதவிகளுக்கும் ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

# பௌத்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உரிமைகள் செயற்பாட்டாளர் முயிஸ் வஹாப்தீன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 35ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரின் உப மாநாட்டில் கலந்துகொண்டு, இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக 538 வன்முறைகள் பதிவாகியுள்ளதோடு, கிறிஸ்தவர்களுக்கெதிராக 20 மேற்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜெனிவா நேரப்படி செவ்வாயன்று ராஜதந்திரிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சர்வேதேச ஊடகவியலாளர்கள், நெறி முறை அவதானிகள் மத்தியில் உரையாற்றிய முயிஸ் வஹாப்தீன் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் இன முரண்பாடு மற்றும் உள்நாட்டு யுத்தம் என்பன அனைத்து இன குழுக்களுக்கிடையில் பாரிய துன்பங்களை உருவாக்கியுள்ள விடயம் என்பது பரவலாக அறியப்பட்ட உண்மையாகும். இந்த ரமழான் காலத்தில், பொதுபலசேனா மற்றும் அதன் சகோதர அமைப்புகளிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களால் முஸ்லிம் சமூகம் பெரும் இன்னல்களை எதிர்கொண்டிருக்கிறது. இந்த விடயம் சம்பந்தமாக நான் ஜெனிவாவில் ஐ.நா. சிறுபான்மையின விவகாரங்களுக்கான விசேட அறிக்கையாளரின் பிரதிநிதியுடன் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தேன். இந்த விஷயத்தைப் பற்றி குறைந்தபட்சம் சில அம்சங்களை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

போருக்குப் பிந்திய காலத்தில் இலங்கை முஸ்லிம் சமூகத்தை சில தீவிரவாத குழுக்கள் இலக்கு வைத்து தாக்குதல்களை தொடங்கியது. கடந்த கால அரசாங்கம் இந்த தீவிரவாத இயக்கங்கள் வளர அனுமதித்தது. இதனால் முஸ்லிம்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டனர். முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. அந்த ஆட்சியை தோல்வியடையச் செய்து இன்றைய ஆட்சியை உருவாக்க இந்த முஸ்லிம்கள் முன்னின்றனர். ஆட்சி மாற்றத்தின் ஆரம்ப கால கட்டத்தில் இந்த தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகளில் ஒரு மந்தநிலையை காணப்பட்டது. ஆனால் இலங்கையின் வடக்குப் பகுதியிலுள்ள முசலி பிரதேசத்தில் நில பிரச்சினைகள் மீண்டும் உருவானது. வடபுல முஸ்லிம்களின் மீள் குடியேறும் உரிமைக்கு எதிராக இந்த குழுக்கள் தமது பிரச்சாரத்தை ஆரம்பித்தனர்.

இதனால் பொது பல சேனா, சிங்கள ராவய, ராவண பலயா போன்ற அமைப்புக்கள் மீள் எழுச்சி பெற்றன. பிறகு அவர்கள் ஒன்று சேர்ந்துகொண்டனர். 'பேஸ்புக் வீரர்கள்' - மகாசன் பாலயா, சிங்கள ஜாதிகா பாலமுலுவை மற்றும் டான் பிரசாத் போன்ற புதிய தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இனவாத மற்றும் வன்முறை செய்திகளை பரப்பும் அமைப்புக்களும் உருவாகின. அரசாங்கத்தின் எந்தவித கடுமையான நடவடிக்கை எடுக்காமையினால், ஞானசார கும்பல் சிறுபான்மையினருக்கு எதிராக பெரிய இனவாத நடவடிக்கைகளை தொடர்ந்தன. சிங்கள பௌத்த வாக்கு வங்கியின் ஆதிக்கத்தை இலக்கு வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லாட்சி அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருகின்றது. பொலிஸில் பல புகார்கள் முஸ்லிம்களால் முறைப்பாடு செய்யப்பட்டும், எந்த வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி முதல், வன்முறை, அச்சுறுத்தல் மத வழிபாட்டு தலங்கள் மற்றும் பிரதானமாக முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தக நிறுவனங்களை தாக்குதல் என்பன அடங்கலாக குறைந்தது 25 வன்முறை சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இந்த வன்முறைகளில் பொது பல சேனா, சிங்கள ராவய, சிங்களே, மகாசன் பாலாயா ஆகியவற்றுடன் இன்னும் சில அமைப்புக்களும் செயற்படுகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் தமது கடின உழைப்பால் உருவான வெற்றியை பாதுகத்துக் கொள்ள வேண்டுமாயின் இந்த பெரும் நெருக்கடியை சமாளிக்க வேண்டும். இந்த வன்முறை தாக்குதல்கள் பற்றிக் கவனிக்காது, அமைதியான பார்வையாளராக இருந்து விட முடியாது. பொலிஸ் மற்றும் பொது பல சேனாவின் கலாகொட அத்த ஞானசாராவிற்கும் இடையே ஒரு பூனை மற்றும் சுட்டி விளையாட்டு நடக்கிறது. போலீசார் அவரை கைது செய்ய 14 நாட்களாக முயற்சிப்பதானது மிகவும் வேடிக்கையானது.

சட்டங்களை சமமாக பாதுகாப்பதற்கான உரிமை ஒரு அரசியலமைப்பு உரிமை மட்டுமல்ல; எந்த நாகரீக சமுதாயத்தில் மீறமுடியாத ஒரு முழு மனித உரிமை அது. இன மற்றும் சிறுபான்மையினரின் மத சட்டங்களை சமமான பாதுகாப்பை நிலைநிறுத்த அரசாங்கம் வலுவான ஆணை பெற்றுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை இந்த நேரத்தில் மைய நிலைக்கு வந்தாலும், கிறிஸ்தவ எதிர்ப்பு வன்முறைகளும் நடைபெற்று வருகின்றன. கிறிஸ்தவ குழுக்களுக்கு எதிராக நீண்டகாலமாக இயக்கப்பட்டு வரும் கிறிஸ்தவ வன்முறைகளும் உள்ளன. நாடு முழுவதும் இது வரை கிறிஸ்தவ வழிபாட்டு முறைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் அச்சுறுத்தல் பற்றிய 20 சம்பவங்கள் நடந்துள்ளன என்று தேசிய கிறிஸ்தவ கூட்டணி தெரிவித்துள்ளது.

# நுகேகொடையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொதுபலசேனா அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் தேரர்களிடம் வாக்குமூலம் பெற இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

தெஹிவளையை வசிப்பிடமாக கொண்ட சுகன் குமார, கடந்த 2014ஆம் ஆண்டு முதல் பொதுபலசேனா அமைப்பின் செயற்பாட்டாளராக இருந்துவந்துள்ளமை தெரியவந்ததைத் தொடர்ந்தே அவ்வமைப்பின் உறுப்பினர்களை விசாரணை செய்ய பொலிஸார் முடிவெடுத்துள்ளனர்.

32 வயதுடைய சுகன் குமார இரண்டு வருடங்கள் இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய ஒருவராகும்.

பொலிஸார் சந்தேகநபரை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாகவும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# சூனியம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் சமன அதாவுத ஹெட்டி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேலும் பேசிய அவர் கூறியதாவது,

இன்று பத்திரிகைகளில் எனக்கு சூனியம் செய்திருப்பது பற்றி ஒரு செய்தியைப் பார்த்தேன்.

எனக்கு எதிராக எந்த நடவடிக்கைகள் விமர்சனங்கள் மற்றும் நோவினைகளை மேற்கொண்டாலும் பௌத்தர் என்றவகையில் நான் பொறுமையாக செயற்படுவேன். எதிராக செயற்படப் போவதில்லை. அத்துடன் அனுராதபுரம் ஹொரவபொத்தான பிரதேசத்தில் எனக்கு சூனியம் வைத்துள்ளதாக இன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அன்று நான் பொதுவேட்பாளராக இருக்கும்போது இருந்த சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல்போனதனால்தான் சூனியம்வைத்தேனும் என்னை அச்சுறுத்த முயற்சிக்கின்றனர். இவர்களின் இந்த சூனியங்களுக்கு நான் ஒருபோதும் நிலை குலையமாட்டேன். இதன்மூலம் நாங்கள் மேலும் சக்திபெறுவோம்.

அத்துடன் அன்று சுயாதீன தொலைக் காட்சி நிறுவனம் எனக்கு எதிராக செற்பட்டாலும் நிறுவனத்தின் அதிகாரிகள் மீது நான் ஒருபோதும் வைராக்கியம் வைக்கமாட்டேன். ஏனெனில் அவர்களை பின்னால் இருந்து இயக்கியவர்கள் யார் என்று எனக்கு தெரியும். மக்கள் அவர்களுக்கு தீர்ப்பளித்து வீட்டுக்கு அனுப்பினார்கள். எனவே கடந்த காலத்தைப்போன்று இந்த ஊடக நிறுவனம் செயற்படாமல் சுயாதீன ஊடக நிறுவனமாக செயற்பட பிரார்த்திக்கின்றேன் என்றார்.

சுயாதீன தொலைக்காட்சி சேவை, ஊடக நிறுவனம் ஒன்றுக்கு இருக்க வேண்டிய சுயாதீனம், ஊடக தர்மம், ஒழுக்கம் போன்றவற்றை பேணி வந்து 38வருடத்தை இன்று பூர்த்தி செய்துள்ளது.1977 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் அரச ஊடகங்களே இருந்து வந்தன. அதன் பிறகே தனியார் ஊடகங்கள் விரிவடைந்தன.

நவீன உலகில் நவீன தொழிநுட்பத்துடன் வாழும் மனிதனை நெறிப்படுத்த ஊடகங்களின் பங்களிப்பு அத்தியாவசியமாகும். ஊடகத்தில் இருக்கக்கூடிய ஆரோக்கியத்தன்மை, மனிதாபிமானம், கட்சி பேதமற்ற தன்மை என்பன மிகவும் அத்தியாவசியமானதாகும். அதனால் ஊடக நிறுவுனர்கள், ஊடகவியலாளர்கள் ஊடக பிரதானிகள் அனைவருக்கும் அனைத்து நாடுகளிலும் தங்கள் தேசத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு சாட்டப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சுயாதீன தொலைக் காட்சி நிறுவனம் 38 வருடகாலம் தனது பொறுப்பை மிகவும் சிறந்த முறையில் மேற்கொண்டு வந்துள்ளது. என்றாலும் இந்த நிறுவனம் மீது மக்கள் வைத்திருந்த கௌரவம்,நம்பிக்கை மற்றும் அதன் சுயாதீனம் என்பவற்றை நான் பொது வேட்பாளராக அரசில் இருந்து வெளியில் வந்தபோதுதான் அது இழந்துவிட்டது. நாட்டில் இருக்கும் எந்தவொரு தேசிய தலைவரும் எந்தவொரு ஜனாதிபதி,பிரதமர் வேட்பாளரும் என்னைவிட இந்த நிறுவனத்தால் அசிங்கப்படவில்லை, நோவிக்கப்படவில்லை. என்றாலும் சிறிய குடும்பத்தில் இருந்துவந்த நான் பாரிய சவாலாக இருந்தமையால்தான் இன்றும் பெரியவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் மிகவும் கீழ்மட்டத்துக்கு சென்று என்னை தாக்க, விமர்சிக்க முற்பட்டனர் என்பதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் வரலாற்றில் அரச ஊடகங்கள் மிகவும் முறையற்றமுறையில் பயன்படுத்தப்பட்டது, நான் பொது வேட்பாளராக வந்தபோதே. குறிப்பாக சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் 38 வருடங்கள் அனுபவம் நிறைந்த நிலையில் கடந்த 2வருடங்களுக்கு முன்னர் மிகவும் மோசமான முறையில் பயன்படுத்தப்பட்டது நான் பொது வேட்பாளராக வந்தபோதே என்றும் தெரிவித்தார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 5 மாடிக் கட்டடத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார். நீதி, ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவும் உரையாற்றியதோடு, காணி அமைச்சர் கயந்த கருணாதிலகவும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்




2019 உலகக்கிண்ணப் போட்டிகள் வரை இலங்கை அணிக்காக விளையாடவுள்ளதாக நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் லசித்

## 2019 வரை விளையாடுவேன்

### மாலிங்க அதிரடி

மாலிங்க தெரிவித்தார். சம்பியன் கிண்ணப் போட்டித் தொடரில் பங்கேற்ற இலங்கை அணி நேற்று நாடு திரும்பியதுடன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இலங்கை அணியின் தலைவர், பயிற்சியாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் பங்கேற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பும் நேற்று மாலை நடைபெற்றது. அங்கு சம்பியன் கிண்ணப் போட்டிகளின் பாகிஸ்தான் அணியுடனான போட்டியின் போது கிரிக்கெட் வர்ணனையாளர்கள் இதுதான் மாலிங்கவின் கடைசி ஐ.சி.சி போட்டி என தெரிவித்திருந்ததாகவும், மாலிங்கவின் நிலைப்பாடு இதுதானா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு மாலிங்க பதிலளிக்கையில்,

அணித்தலைவர், பயிற்சியாளர்கள் உள்ளிட்ட இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 2019 உலகக்கிண்ணம் வரை என்னை விளையாட வேண்டும் என விரும்புவார்களாயின் நிச்சயம் அதுவரை நான் விளையாடத் தயாராகவுள்ளேன். அத்துடன் இனிவரும் காலங்களிலும் இலங்கை அணிக்காக குறிப்பாக ஒருநாள் போட்டிகளில் விளையாட ஆர்வத்துடன் உள்ளேன். மேலும் இம்முறை சம்பியன் கிண்ணத் தொடரில் எனக்கு விக்கெட்டுக்களை கைப்பற்ற முடியாமல் போனது. எனக்கு தற்போது 33 வயதாகின்றது. ஆரம்ப காலங்களைப் போல நுணுக்கத்துடன் பந்துவீச முடியாவிட்டாலும் அணிக்காக 100 சதவீத பங்களிப்பினை வழங்கினேன். குறிப்பாக பாகிஸ்தானுடனான போட்டியில் எமது வீரர்கள் பிடியெடுப்புகளை தவறவிட்டதனாலேயே தோல்வியைத் தழுவ நேரிட்டது என தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அதை நான் மறுக்கிறேன். நானும் பல்வேறு போட்டிகளில் இவ்வாறு முக்கியமான பிடியெடுப்புகளை தவறவிட்டுள்ளேன் என மாலிங்க தெரிவித்தார்.

## சங்கக்காரவின் நூறாவது 100




இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான குமார் சங்கக்கார, இங்கிலாந்தின் சரே அணிக்காக தான் விளையாடியிருந்த உள்ளூர் ஒரு நாள் போட்டியில் சதம் பெற்றதன் மூலம் முதல்தர மற்றும் முதல்தர ஒரு நாள் (List A) போட்டிகளில் 100ஆவது சதத்தினை பதிவு செய்த முதல் இலங்கை வீரர் என்ற புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தற்பொழுது 39 வயதாகும் குமார் சங்கக்கார அண்மைக்காலமாக சரே அணிக்காக சிறந்த முறையில் பிரகாசித்து வருகின்றார். இந்நிலையில், யோக்ஷெயர் அணிக்கெதிரான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லண்டன் றோயல் கிண்ணத் தொடருக்கான போட்டியில் அவர் 121 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலமே அவர் தனது 100 ஆவது சதத்தினை பூர்த்தி செய்திருந்தார். சங்கக்காரவின் இந்த 100ஆவது சதத்தின் உதவியுடன், இப்போட்டியில் சரே அணி 24 ஓட்டங்களால் யோக்ஷெயர் அணியினை வீழ்த்தியதுடன், தொடரின் அரையிறுதிப் போட்டிற்கும் தெரிவாகியது. இது சங்கா முதல்தர ஒரு நாள் போட்டிகள் பெற்றுக்கொண்ட 39ஆவது சதமாகும். அதேபோன்று, அவரால் முதல்தர போட்டிகளில் 61 சதங்கள் ஏற்கனவே பெறப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன் இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் முதல்தர போட்டிகளில் 142 சதங்களையும், பாகிஸ்தானின் முன்னாள் வீரர் சஹீர் அப்பாஸ் 127 முதல்தர சதங்களையும் குவித்திருந்தனர். இதன்படி இந்த மைல்கல்லை எட்டிய உலகின் 37ஆவது வீரராகவும், ஆசியாவின் 3ஆவது வீரராகவும் சங்கா வரலாற்றில் இடம்பிடித்தார்.

இடது கை துடுப்பாட்ட வீரரான குமார் சங்கக்கார, இதுவரையில் அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலும் மொத்தமாக 45,529 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 2015ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்ற அவர் இங்கிலாந்தில் இடம்பெறும் இந்த பருவகாலப் போட்டிகளைத் தொடர்ந்து முதல்தரப் போட்டிகளிலிருந்தும் முழுமையான ஓய்வினைப் பெறப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த மாத இறுதியில், குமார் சங்கக்கார முதல்தரப் போட்டிகளில் தொடர்ச்சியான தனது ஆறாவது சதத்தினை பூர்த்தி செய்து சாதனை ஒன்றினை பதிவு செய்ய இருந்தும், அதனை அவர் வெறும் 16 ஓட்டங்களால் தவறவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான சங்கக்கார, இதுவரையில் 134 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி மொத்தமாக 12,400 ஓட்டங்களினை குவித்துள்ளதோடு, 404 ஒருநாள் போட்டிகளில் விளையாடி மொத்தமாக 14,234 ஓட்டங்களினைப் பெற்றுள்ளார். அதேபோன்று சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 25 சதங்களையும், சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் 38 சதங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதல்தர மற்றும் முதல்தர ஒரு நாள் (List A) போட்டிகளில் 100ஆவது சதத்தினை பதிவு செய்த முதல் இலங்கை வீரர் என்ற பெருமை சங்கக்காரவையே சாரும்.

### தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர்:

## 400 மீற்றரில் காலிங்கவுக்கு தங்கம் தனுக, நிலானிக்கு வெள்ளிப்பதக்கம்






பீ.எப்.எம் றிஷாட்

தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர் போட்டித் தொடரில் பங்கேற்றுள்ள இலங்கை 2 வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் காலிங்க குமாரகே தங்கம் பதக்கம் வென்றார். நேற்று நடைபெற்ற இப்போட்டியை அவர் 47.55 செக்கன்களில் நிறைவு செய்தார். எனினும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியை 47.59 செக்கன்களில் அவர் நிறைவுசெய்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


இந்நிலையில், பெண்களுக்கான சம்மட்டி எறிதலில் தேசிய சாதனையை 4 முறை முறியடித்த அயேசா மதுவன்தி, சுமார் 4 வருடங்களுக்குப் பிறகு சர்வதேசப் போட்டியொன்றில் இலங்கை அணியை முதற்தடவையாக நேற்று பிரதிநித்துவப்படுத்தியதுடன், இலங்கை சாதனையை 2 தடவைகள் முறியடித்தார். அவர் 47.93 மீ. மற்றும் 48.08 மீ. தூரங்களை பதிவுசெய்து இவ்வாறு இலங்கை சாதனையை 6ஆவது தடவையாக முறியடித்தார். ஆனால் அவருக்கு குறித்த போட்டியில் முதல் மூன்று இடங்களுக்கு வரமுடியாமல் போனது.

இந்நிலையில், போட்டிகளின் முதல் நாளான திங்கட்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான நீளம் பாய்தலில் பங்குபற்றிய தனுக லியனபத்திரன வெள்ளிப்பதக்கத்தை வென்றார். அவர் குறித்த போட்டியில் 7.73 மீற்றர் தூரம் பாய்ந்திருந்து 0.7 மீற்றர் தூரத்தால் தங்கப்பதக்கத்தை தவறவிட்டார். இப்போட்டியில் 7.778 மீற்றர் தூரத்தைப் பாய்ந்த பிலிப்பைன்ஸ் நாட்டு வீரர் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார். எனினும், இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தகுதிகாண் போட்டியில் பங்குபற்றிய அவர் 7.88 மீற்றர் தூரம் பாய்ந்து ஆசிய போட்டிகளுக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டலில் பங்குபற்றியிருந்த நிலானி ரத்னாயக்க இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் குறித்த போட்டியை 10 நிமிடங்களும் 29 செக்.03 விநாடிகளில் நிறைவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், போட்டியில் முதலிடத்தைப் பெற்ற வியட்நாம் வீராங்கனை அப்போட்டியை 10 நிமிடங்களும் 13செக்.03 விநாடி நிறைவு செய்திருந்தார்.

தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர் போட்டித் தொடரில் இலங்கையிலிருந்து 8 வீரர்கள் பங்குபற்றியிருந்ததுடன், இலங்கை அணியில் 3 புதுமுக வீரர்களுக்கு சர்வதேச போட்டிகளில் முதற்தடவையாக பங்கேற்கும் வாய்ப்பு கிட்டியது. இதன்படி, தேசிய அரங்கில் கோலூன்றிப் பாய்தலில் சாதனைக்கு மேல் சாதனைகளை படைத்து வருகின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனிதா ஜெகதீஸ்வரனும் இப்போட்டித் தொடரில் முதற்தடவையாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி நேற்றுமுன்தினம் போட்டியிட்டார். ஆனால் அவரால் அப்போட்டியை சிறந்த முறையில் நிறைவு செய்ய முடியாமல் போனது.

## பாகிஸ்தான் தொகுப்பாளினியால் கேப்டன்களுக்கு நேர்ந்த அவலம்



தற்போது நடைபெற்றுவருகின்ற சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் உலகின் முதல் நிலை கிரிக்கெட் அணிகளுடன் அந்தந்த நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டுள்ளனர். இதில் பாகிஸ்தானின் துன்யா நியூஸ் தொலைக்காட்சியின் தொகுப்பாளினியான சைனாப் அப்பாஸ் அனைவரது மத்தியிலும் பேசப்படுகின்ற முக்கிய நபராக மாறியுள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் பாகிஸ்தான் அணியுடன் இம்முறை சம்பியன் தொடரின் லீக் போட்டிகளில் மோதிய எதிரணியின் தலைவர்களுடன் மைதானத்தில் வைத்து செல்பி எடுத்தமை, அதன்பிறகு சமூகவலைத்தளங்களில் பதிவிட்டமை கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. அதிலும் குறிப்பாக சைனாப் அப்பாஸுடன் செல்பி எடுத்த விராட் கோஹ்லி மற்றும் ஏ.பி டிவில்லியர்ஸ் ஆகியோர் பாகிஸ்தானுடனான போட்டியில் எந்தவொரு ஓட்டங்களையும் பெறாமல் பெவிலியன் திரும்பினர்.

ஆனால் இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மெத்யூஸுடன் அவர் இறுதியாக எடுத்துக்கொண்ட செல்பிக்கு பலர் சமூகவலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவு செய்தனர். இதில் பலர் கோஹ்லி மற்றும் டிவில்லியர்ஸுக்கு ஏற்பட்ட நிலையே மெத்யூஸுக்கும் ஏற்படும் என பதிவிட்டிருந்தனர். எனினும், பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் மெத்யூஸ் சிறப்பாக துடுப்பெடுத்தாட முடியாமல் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுடன், இறுதியில் இலங்கை அணி வெற்றியின் எல்லைக்கு வந்து துரதிஷ்டவசமாகத் தோல்வியைத் தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரொனால்டோவுக்கு எதிராக வழக்கு பதிவு




உலகில் அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு எதிராக வரி ஏய்ப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஸ்பானிய அதிகாரிகளால் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. போர்த்துகல் நாட்டைச் சேர்ந்த ரொனால்டோ, ரியல் மெட்ரிட் கழகத்திற்காகவும் விளையாடி வருகிறார்.

அவர் 2011ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவர் 16 மில்லியன் டொலர் வரியைச் செலுத்தாமல் ஏமாற்றி இருப்பதாக தெரிவித்து அவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் அவர் மீது வரி ஏய்ப்புக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போதும், அதனை அவர் மறுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்டியானோ ரொனால்டோ கடந்த ஆண்டு பெற்றுக்கொண்ட சம்பளம் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் 93 மில்லியன் டொலர்களை வருமானமாக ஈட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல் சமீபத்தில் கால்பந்து உலகின் மற்றொரு முன்னணி வீரர் மெஸ்சியும் வரி ஏய்ப்பு வழக்கில் சிக்கி 21 மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இறுதிக்குள் நுழையுமா இந்தியா? இன்று பங்களாதேஷுடன் பலப்பரீட்சை

8ஆவது சம்பியன் கிண்ணப் போட்டித் தொடரின் தீர்மானமிக்க 2ஆவது அரையிறுதிப் போட்டி இன்று பேர்மிங்ஹமின் எட்ஜ் பெஸ்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பி பிரிவில் முதலிடம் பிடித்த இந்தியா ஏ பிரிவில் 2ஆம் இடம் பிடித்த பங்களாதேஷ் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

விராட் கோஹ்லி தலைமையில் இந்தியா துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்து துறைகளிலும் சம பலத்துடன் திகழ்கிறது. ரோஹித் சர்மா, ஷிகர் தவான், விராட் கோஹ்லி, யுவராஜ்சிங், டோனி ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார், பும்ரா, ஜடேஜா, அஸ்வின் ஆகிய சிறந்த வீரர்கள் உள்ளனர். தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இந்தியா வீரர்களின் களத்தடுப்பு அபாரமாக இருந்தது. அந்த உத்வேகத்தை இன்றும் இந்திய வீரர்கள் தொடர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய இதுவரை 3 முறை இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ளது.

இதில் 2000ஆம் ஆண்டு நியூசிலாந்திடம் தோற்று கோப்பையை இழந்தது. 2002ஆம் ஆண்டு இலங்கையுடன் சம்பியன் பட்டத்தை பகிர்ந்து கொண்டது. அதன்பிறகு இறுதியாக 2013ஆம் ஆண்டு இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியா சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்நிலையில், 4ஆவது முறையாக இறுதிப் போட்டியில் விளையாடும் ஆர்வத்தில் இந்திய களமிறங்கவுள்ளது. 'எனினும், இந்தியாவை விட பங்களாதேஷ் பலம் குறைந்த அணி என்றாலும் திடீரென்று எழுச்சி அதிர்ச்சி அளிக்கக் கூடிய வகையில் விளையாடக் கூடியவர்கள். இதனால் இந்திய வீரர்கள் கவனமுடன் விளையாட வேண்டியது அவசியம். அரையிறுதியில் பங்களாதேஷ் அணியுடன் மோதுவது இந்தியாவுக்கு நல்ல ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. அதை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மஷ்ரபி மொர்தாசா தலைமையிலான பங்களாதேஷ் அணியில் அனுபவ வீரர்களான தமீம் இக்பால், முஷ்பிகுர் ரஹீம், சகீப் அல் ஹசன், மஹமுதுல்லா ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். பந்துவீச்சில் தஷ்கின் அஹமட், முஸ்தாபிசுர் ரஹ்மான், மொர்தாசா ஆகியோர் உள்ளனர். லீக் போட்டியில் நியூசிலாந்து அதிர்ச்சி அடைந்தது போல் அரையிறுதியில் இந்தியாவை வீழ்த்தும் முனைப்பில் பங்களாதேஷ் அணி களமிறங்கவுள்ளது. சம்பியன் கிண்ணத்தில் முதற்தடவையாக அரையிறுதியில் விளையாடவுள்ள அந்த அணி இறுதிப் போட்டியில் முன்னேறினால் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மிகப் பெரிய சாதனையாக அமையும். எனவே அவ்வணி நம்பிக்கையுடன் இப்போட்டியில் இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது.




## டி20 அணித்தலைவராக மீண்டும் டிவில்லியர்ஸ்

சம்பியன் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து, இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில், இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட டி20 சர்வதேசப் போட்டித் தொடரில், தென்னாபிரிக்க அணியின் தலைவராக, ஏபி டிவில்லியர்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவ்வணியின் வழக்கமான தலைவரான டு பிளெஸிஸ் தனது முதல் குழந்தையின் பிரசவத்துக்காக தென்னாபிரிக்க திரும்பியுள்ள நிலையில், டி20 அணியின் தலைவராக, ஏபி டிவில்லியர்ஸ் செயற்படவுள்ளார்.

சம்பியன் கிண்ணத் தொடரில், தென்னாபிரிக்க அணியின் மோசமான பெறுபேறுகளைத் தொடர்ந்து, ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தலைமைப் பொறுப்பை, டிவில்லியர்ஸ் இழப்பாரா என்ற எதிர்பார்ப்புகள் எழுந்திருந்தன. ஆனால், டி20 சர்வதேச அணியின் பதில் தலைவர் பொறுப்பு, அவருக்கு வழங்கப்பட்டுள்ளமை, அவர் மீதான நம்பிக்கையை, தேர்வாளர்கள் இழக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. இந்தத் தொடரில், ஹஷிம் அம்லா, ஜேபி டுமினி, குயின்டன் டி கொக் ஆகியோருக்கு, ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்வரும் ஜுலை மாதம் 6ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இவ்வீரர்கள் தென்னாபிரிக்க அணியுடன் இணைந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. நடைபெற்றுவரும் ஐ.சி.சி சம்பியன் கிண்ண தொடருக்கு முன்னதாக நடைபெற்ற மூன்று போட்டிகளை கொண்ட ஒரு நாள் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், தென்னாபிரிக்க மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டி20 போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட இங்கிலாந்து அணியில் 5 புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.




## தேசிய விளையாட்டு விழா நடைப் போட்டி 17இல்

பீ.எப்.எம் றிஷாட்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் நடைப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை பத்தரமுல்லையில் உள்ள விசேட செயற்கை ஓடு பாதையில் நடைபெறவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக மரதன் ஓட்டம், நடை போட்டி மற்றும் சைக்கிளோட்டப் போட்டி என்பன கடந்த மாதம் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் எம்பிலிப்பிட்டியவில் நடைபெறவிருந்தது. எனினும், நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக போட்டிகள் அனைத்தும் காலவரையறையின்றி பிற்போடப்பட்டன.

இந்நிலையில், தேசிய விளையாட்டு விழாவின் நடைப்போட்டியை கொழும்பில் நடத்தவும், மரதன் மற்றும் சைக்கிளோட்டப் போட்டிகளை எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம், 2ஆம் திகதிகளில் மஹியங்கனையில் நடத்தவும் ஏற்பாட்டுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 15TH JUNE 2017